# வெற்றிமுனை

## பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 30/- ISSN No. 2394-2428

அறிவைத்தேடி அன்பு நிறைந்த ஒரு பயணம்

மலர் – 7 மார்ச் – 2020 இதழ் – 10



*சிறப்பாசிரியர் :*
**முனைவர் ச. விஜயலட்சுமி**

*முதன்மை ஆசிரியர் :*
**நீதிபதி மூ. புகழேந்தி**

*ஆசிரியர் :*
**முனைவர் மோ. பாட்டழகன்**
**9380417307**

*பொறுப்பாசிரியர்கள் :*
**அகமது ருமைசுதின் பைசி**
**முனைவர் ஜெ. பாரதி**

*துணை ஆசிரியர்கள் :*

**கவிஞர் உமர் கத்தாபு**
**முனைவர் முத்தையா**
**முனைவர் விமலா அண்ணாதுரை**
**கவிஞர் திருவைபாபு**
**இர. மகேந்திரன்**
**எழுத்தாளர் அ. அன்பழகன்**
**இளங்கவி ஆதம் அகிலன்**
**முனைவர் வ. சங்கீதா**
**முனைவர் அனிதா பரமசிவம்**
(எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்)
**ச. நந்தகுமார்**

அமெரிக்கா - பொறுப்பாசிரியர்
**எழுத்தாளர் ஜெ. புவனேஷ்வரி**

முதன்மைச் செய்தியாளர்
**ஐஸ்வர்யா கணேசன்**

வடிவமைப்பு :
**ச. நந்தகுமார்**

**ஆலோசனைக் குழு :**

**முனைவர் மருதூர் அரங்கராசன்**
**பேரா. திருமதி. சோதிலட்சுமி**
**முனைவர் இனியன் கோவிந்தராஜு**
**முனைவர் சி. கோமளவல்லி**
**எம். கோவிந்தன்**
**பேராசிரியர் அரங்க. சீனிவாசன்**
**இரா. கௌதமராஜன்**
**முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி**
**முனைவர் ஈ. யுவராணி**



மின்னஞ்சல் மூலம் படைப்புகளை அனுப்பலாம்.
vasantha.tha399@gmail.com


இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர்: வெற்றிமுனை**
26, ஜோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088. அலைபேசி: 93804 17307

# கவிதைப் பெண்!

முத்தமிழ் கவிஞர்

**முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**



வீடுகளில் காற்றெழுப்பும் விசிறி உண்டு!
        விலைமதிக்க முடியாத கவிதை உண்டா?
வீடுகளில் நெருப்புண்டு சமையல் செய்ய!
        விழிப்புணர்வு தருகின்ற கவிதை உண்டா?
வீடுகளில் தண்ணீரை நிரப்பி வைப்பார்
        விருந்தளிக்கும் கவிதைநூல் இருப்ப துண்டா?
வீடுகளில் தரைமீது கோலம் உண்டு
        வெற்றிதரும் கவிதைநூல் வைப்ப துண்டா?

குற்றால அருவிக்கு முதுகு வளைந்து
        கூன்விழுந்த செய்திஉண்டா? பரந்து நிற்கும்
வற்றாத கடலுக்கு வறுமை வந்து
        வாய்க்காலாய் ஆனதொரு காட்சி உண்டா?
சுற்றாமல் கதிரவனும் ஒருநாள் மண்ணில்
        சுருங்கிப்போய் நின்றதுண்டா? நேர்மை யுள்ள
கற்றோரே! நெஞ்சத்தைத் திறந்து சொல்வீர்!
        கவிதைப்பெண் எப்போது கிழவி ஆனாள்?

நாள்தோறும் நல்லநல்ல கவிதை கற்கும்
        நற்பழக்கம் நரம்புகளில் ஊக்கம் நல்கும்!
நாள்தோறும் புத்துணர்ச்சி பெருகும்! வையம்
        நலம்காணத் திருக்குறளைப் படிப்பீர்! துன்பம்
வாள்போல வந்தாலும் சங்கப் பாட்டு
        மகிழ்ச்சியினை ஊட்டிவிடும்! பகைவர் வந்து
தேள்போலக் கேடுகளைச் செய்யும் போதும்
        சிலப்பதிகா ரம்உமக்கோர் அமைதி நல்கும்!

## தலையங்கம்

*பெற்றோரைப் போற்றிடுவோம் பெருமையுடன் வாழ்ந்திடுவோம்*
*கற்றோரை நாடிடுவோம் கலையெல்லாம் மாந்திடுவோம்*
*வெற்றிமுனை எய்திடுவோம் விண்தொட்டுப் பார்த்திடுவோம்*
*குற்றமில்லா வாழ்வாலே குவலயத்தைக் காத்திடுவோம்*

**நீதிபதி மூ. புகழேந்தி**

---

# திமிர்... திமிரானது!



"ஏன்னா திமிரா போறான் பாரு!" இது பெரும்பாலான தகப்பன்கள் தன் வயது வந்த மகனை எரிச்சலடைந்து திட்டும் சொற்கள். அவருக்கும் அவனுக்கும் இருபதோ இருபத்தைந்தோ வயது வித்தியாசமிருக்கும். இன்றைய காலக் கட்டத்தில் அவனின் போதாத நேரம் படித்து முடித்தும் வேலை கிடைக்காமல் இருப்பான்.

உண்மையிலேயே அவன் திமிராக இருந்தானா என்பது அவருக்கும் தெரியாது. அவரும் அவனைத் திட்டவேண்டுமென்று திட்டினாரா என்று அவனுக்கும் தெரியாது. எல்லாம் குடும்ப சூழ்நிலையாகவே இருக்கும். இருவருக்கும் இடையில் தாய் குறுக்கிடுவாள். இதுவும் எல்லாத் திரைப்படங்களிலும் வருகின்ற காட்சிதான்.

இது இப்படியே இருக்கட்டும்! திமிர் எப்படி ஏற்படுகின்றது? அதைத் தெரிந்தால்தானே அதை நம்மிடமிருந்து நீக்க முடியும்.

திமிர் என்பது மனிதன் கூட ஒட்டிப்பிறந்ததே. அது ஆளுக்கேற்ப அவரவர் சூழ்நிலைக்கேற்ப வேறுபடும்.

சிலருக்கு அதைக் காட்ட வேண்டும் என்று தினவெடுக்கும். அங்கேதான் பிரச்சினையே!

பணம் கொழுத்துவிட்டால் - சிலருக்கு திமிர் எகத்தாளம் ஏகடியம் பேசும். பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்று திமிர் அவர்களுக்குத் தலைவிரித்தாடும். பதவி ஏறிவிட்டால் அந்த மயக்கத்தில் சுகத்தில் சிலருக்குத் திமிர் தினவெடுக்கும். புகழ் மயக்கத்திலும் சிலருக்கு அது ஏற்படுவதுண்டு.

அதிகாரம் படைத்தவர்கள் திமிரால் எல்லோரையும் துச்சமெனத் தூக்கி எறிவர். இவர்களெல்லாம் மற்றவரை மதிக்க விரும்பார். அவர்களைத் தான் எல்லோரும்

துதிபாடவேண்டும் என்று விரும்புவர். அதனால் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு என்ற நிலை ஏற்படுகின்றது. பணமும் பதவி அதிகாரமும் உள்ள வர்கள் முன்னே அவை இரண்டு மில்லாதவர்கள் கைகட்டி பணிந்து நிற்பதை இன்றும் காண்கின்றோம்.

சமத்துவம் பேசுபவர்களும் இதில் விதி விலக்கல்ல. அவர்கள் நினைக்காமலேயே இல்லாதவர்களை ஆட்டிப் படைக்கும் திமிர் அவர் களிடம் ஒன்றிக் கிடப்பதை நாம் காணமுடியும். திமிர்தான் எவரையும் மதிக்காத அகம்பாவத்திற்கும் ஆண வத்திற்கும் ஒருவனைக் கொண்டு செல்கின்றது. கவியரசு கண்ண தாசன் ஒரு சம்பவத்தை எடுத் துரைக்கின்றார்.

'நம்மிடம் ஏதுமில்லை' என்று நினைப்பது ஞானம். 'நம்மைத் தவிர ஏதுமில்லை' என நினைப்பது ஆணவம். ஞானம், பணிந்து பணிந்து வெற்றிமேல் வெற்றியாகப் பெறுகிறது. ஆணவம், நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது. நமது புராண இதிகாசங்களில் ஆணவத் தால் அழிந்தவர்களைச் சித்திரிக் காதது மிகவும் குறைவு.

'நான்' என்னும் எண்ணம் ஒருவனுக்குத் தோன்றுகின்ற தென்றால், அவன் தோல்விகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக் கிறான் என்று பொருள். அறிவு குறைவானவர்களுக்கே ஆணவம் வருகிறது. நிறை குடங்களுக்கு அது வருவதில்லை.

வெற்றி மயக்கம் ஏற ஏற அறிவு தடுமாறி, முட்டாள்தனமான தைரி யம் தோன்றி, 'எல்லாம் நாமே' என்று எண்ணம் பிறந்து, தடுமாறிக் காரி யம் செய்யத் தொடங்கியதும் ஒவ் வொரு தோல்வியாகத் தொடர்ந்து வந்து, ஆணவக்காரனைக் கூனிக் குறுகச் செய்கின்றன.

எனக்குத் தெரிந்த ஒரு நீண்ட கால நண்பர். ஆரம்பத்தில் மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சிரமத்தோடு கடன் வாங்கி ஒரு படம் எடுத்தார். கதை, வசனம், டைரக்ஷன், எல்லாம் அவரே.

படம், 'ஓகோ' என்று ஓடிற்று. வெற்றி மயக்கத்தில் அவர் நிலை கொள்ளவில்லை! உடனே ஒரே நேரத்தில், நாலைந்து படங்கள் எடுக்கப்போவதாக விளம்பரம் செய்தார்.

விநியோகஸ்தர்கள் அவரிடம் வந்து, "புதிய படங்களை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்; யார் யார் நடிக்கிறார்கள்!" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் கோபமாக, "எல்லாம் நானே; என் பெயருக்குத் தான் படமே தவிர நடிப்பவர் களுக்காக அல்ல; இஷ்டமிருந்தால் கையெழுத்துப் போடுங்கள்" என்று மிரட்டினார்.

நான் ஒருநாள் அவரைச் சந்தித்தபோது, "என் ஒவ்வொரு படத்தையும் 'பாக்ஸ் ஆபீஸ்' பண்ணிக் காட்டுகிறேன்" என்று என்னிடமே சவால்விட்டார். "என்னு டைய படம் என்றால், ஓலையிலே பிரிண்ட் பண்ணினாலும் ஓடும்" என்று சொன்னார்.

பெரிய பெரிய கோவில்களுக் கெல்லாம் வேண்டிக் கொண்டும், அவரது அடுத்த படம் படுதோல்வி யடைந்தது. மூன்றாவது படமும் படு தோல்வி. கடன்காரர் ஆனார். ஒரு வெற்றிக் கண்ணுக்குத் தெரிந்து விட்டால், வரப் போவதெல்லாம் வெற்றியே என்ற திமிர் வருகிறது.

என்னைத் தாக்கிவிட்டால் தாங்கள் பெரிய கவிஞர்கள் என்ற எண்ணத்தில், அசிங்கமாகத் தாக்கு வார்கள். நான் அடக்கத்தோடும் பயத்தோடும் உட்கார்ந்திருப்பேன். அவர்களைத் தாக்க மாட்டேன். காரணம், கிருபானந்தவாரியர் சொன்ன ஒரு கதை.

கோயில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக்கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்ததாம். ஓர் ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக் கொண்டே வந்ததாம். யானை ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழி விட்டதாம்.

அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், "பார்த் தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!" என்று சொல்லிச் சிரித்ததாம்.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா! நீ பயந்து விட்டாயா?" என்று கேட்டதாம்.

அதற்குக் கோயில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்ன தாம். "நான் சுத்தமாக இருக்கிறேன், பன்றியின் சேறு என் மேல் விழுந்து விடக் கூடாதே என்று ஒதுங் கினேன். நான் ஏறி மிதித்தால் அது துவம்சம் ஆகிவிடும்; ஆனால் என் கால் அல்லவா சேறாகிவிடும்." - இந்தக் கதையின்படி சிறியவர்களின் ஆணவத்தைக் கண்டு, நான் அடக் கத்தோடு ஒதுங்கி விடுவது வழக்கம். முன்னேற விரும்புகிற எவனுக்கும் ஆணவம் பெருந்தடை.

'எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்' என்றான் வள்ளுவன். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்று பேசுகிறவர்கள் உண்டு. ஆனால், கம்பனுக்கு அந்த ஆணவம் வந்த தில்லை. அதனால் தான், காலங் களுக்கும் நிலைக்கக் கூடிய காவி யத்தை அவனால் எழுத முடிந்தது.

இன்றைக்கு அதிகமான திமிர்ப் பிடித்தது கொரோனாதான். அது எதற்கும் யாருக்கும் அடங்க மறுக்கின்றது. விரைவில் அதையும் அடக்கியொடுக்கும் காலம் வரும்.

எனவே நம்மிடம் திமிர் தன் வேலையைக் காட்டாது நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அது குடும்பத்தில் மகிழ்ச்சியை யும், நண்பர்களிடையே சுமூகத்தை யும், சமுதாயத்தில் நற்பெயரையும் சம்பாதித்துத் தரும். கொரோனா வைப் போல் நம்மிடமிருந்தால் திமிருக்கும் விடை கொடுப்போம்.

மக்கள் நலம் நாடும்,

**நீதிபதி மூ. புகழேந்தி**

# தெற்காசிய நாடுகளில் அமைப்புகள் முன்னெடுக்கும் தமிழ்ச் சமயநெறி

**முனைவர் ப.முருகன்**
தமிழ்த்துறைத் தலைவர்
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி
அரும்பாக்கம், சென்னை - 600106.

## *முன்னுரை*

ஒரு மனிதன் பண்படுவதற்கு சமூகமும் சமயமும் துணையாகும். இயல்பு வழக்கில் மாதா, பிதா, குரு, தெய்வம் எனக் குறிப்பிடுவதைப் போல ஒரு குழந்தை பிறந்தவுடன் தாய் வழிப்படுத்துகிறாள். எப்படி ஒழுக்கமுடைய குழந்தையை பாட சாலைக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்து அறிவூட்டுவதையும் பின் அன்பு வெளிப்படுமாறு பிறரிடம் உறவாடுவதையும் அருள் சுரக்க தன் வாழ்நாள் முழுமையும் வாழ வழிவகையும் விட்டுக்கொடுக்க (துறவு) பண்படுவதையும் சமுகமும் சமயமும் இணைந்தே கற்றுத் தருகின்றன.

மேலும் எண்ணம், சொல், செயல் இவை மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் நின்று ஒரு முகத் தன்மை பெற இறை வழிபாடுதேவை ஆனால் அறிவியல் concentration என்கிறது.

முதலாவதில் ஒர் உருவம், ஒர் நாமம் தேவை. இரண்டாவதில் ஒரு எண் அல்லது ஒரு பொருள் தேவை. ஆனால் இந்து சமயத்தில் மட்டும் இறைவன் பல்வேறு திருப் பெயர் களில் எழுந்தருளியுள்ளமையை காணமுடியும்.

இச்சூழலில் ஒவ்வொரு மனிதனும் மனம் போல வழிபட தன் மனக்குறையை எண்ணி வழிபட இறைவன் (அ) ஆலயம், பள்ளி வாசல் என தேவையாகிறது அவ்வாறான சூழலில் நம் தமிழ்ப் பண்பாட்டில் பக்தி இயக்கம் எத்தகைய மாற்றத்தைத் தெற்காசிய நாடுகளின் அமைப்பின் வழி ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இக்கட்டுரையின் கண் அறியலாம்.

## *மலேசியாவில் அருள் நெறி திருக்கூட்டம்*

மலேசியாவில் காலம் காலமாய் வாழ்ந்துவரும் தமிழர்களின் பக்தி நெறியைப் பார்க்குங்கால் தமிழகத் தில் தலைமுறையாய் வாழ்ந்து வருபவரைக் காட்டிலும் மேன்மை உடையதாக இருக்கிறது. உதாரண மாக கோலாலம்பூர் அருள்நெறி திருக்கூட்டம் என்ற அமைப்பினர் (மருத்துவர் கதிரேசன், தலைவர், அருள்நெறி திருக்கூட்டம்) பொது மக்களையும் இறைவன்பால் பெரும் காதல் உடையவர்களையும் கூட்டு கின்றவிதம் வியப்பாக இருக் கின்றது. தமிழகத்திலிருந்து வரும் பக்திச் சொற்பொழிவாளர்களை அணுகும்விதம் பெருமையாக

இருக்கிறது. திருமந்திரம் குறித்து என்னைப் பேச அழைத்திருந்தார்கள். அப்போது நகரமெங்கும் மழைக்காலமாக இருக்கிறது. இருப்பினும் 20 வயது முதல் 90 வயது வரையுள்ள அன்பர்கள் கலந்து கொண்டதும் அவர்கள் நெற்றி நிறைய திருநீறு அணிந்திருப்பதும் கழுத்திலே உருத்திராட்சம் அணிந்திருப்பதும் சொற்பொழிவின் ஊடாக வாழ்வியல் தொடர்பான வினாக்களைத் தொடுப்பதும் தெய்வபக்தியின் உச்சத்தைக் காட்டுகின்றது.

மேலும் மண்தரையில் உட்கார்ந்து கொண்டு ஒரு யோகியைப் போல சமயக் கருத்துக்களை உள்வாங்கும் விதம் தமிழர்கள் எங்கு சென்றாலும் ஒரு மேம்பட்ட நெறியைச் சமயத்தின் வழி பின்பற்றுகிறார்கள் என்றால் அது மிகையாகாது. மேலும் அத்திருக்கூட்ட அமைப்பு அமைந்திருக்கும் கோலாலம்பூர் கட்டட வளாகத்தில் உள்ள உருத்திராட்ச தருவை (மரத்தைச்) சிவனாக மதிக்கிறார்கள்.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** (குறள் -2)

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தூய்மையாக இருந்து வெந்நீறு அணிந்து வெள்ளாடை உடுத்தி, தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவாக போற்றி, சிவாயநம எனச் சிந்திப்போர்க்கு அபாயமில்லை என முழங்கிட இறைவனை வழிபடுகின்றனர். வாழ்ந்தும் வருகின்றனர்.

## *பினாங்கு இந்து மகா சங்கம்*

இங்கு பெரும்பான்மை தமிழர்களாக இருந்தாலும் குறிப்பாக தொழில் தொடர்பாக மூன்று நான்கு தலைமுறைக்கு மேல் நிரந்தரமாக பினாங்கில் வாழ்பவர்கள் செட்டியார் என்று அழைக்கப்படும் நகரத்தார் பெருமளவு இருக்கிறார்கள். இவர்கள் இப்படி ஒரு சங்கம் நிறுவி பல்லாண்டு காலமாக நடத்தி வருகிறார்கள்.

குறிப்பாக இம்மக்கள் முருக பக்தியை முன்னெடுக்கிறார்கள். வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை முருகவழிபாடு, மாதம் தவறாமல் ஆன்மீகச் சொற்பொழிவாளர்களை நியமித்து முருகன் தத்துவம், அறுபடைவீடு வரலாறு, சஷ்டி விரத மேன்மை, சூரசம்ஹாரம், ஆடி மற்றும் தை கிருத்திகை விழா, தைப்பூசத் திருவிழா எனப் பல்வேறு சூழலில் முருக வழிபாட்டை மேம்பாட்டுடன் நடத்துகிறார்கள். பினாங்கு கல்லுமலை முருகன் தண்ணீர்மலை முருகன் கோயிலும் பாலதண்டாயுதபாணி கோயிலும் பினாங்கு தமிழர்களின் உயர்ந்த பக்தி நெறியைப் புலப்படுத்துகிறது.

## *தைப்பிங் - பச்சையம்மன் கோயில்*

மலேசியாவில் உள்ள தைப்பிங் மாநிலத்தில் (கம்போங் ஜிபோங் லாமா 34700 சிம்பாங் தைப்பிங் பேராக் மலேசியா - 10.07.2016

குடமுழுக்குவிழா) உள்ள ஆற்றங்கரை அருள்மிகு கதிர்வேல் முருகன் ஆலயம், அருள்மிகு மகாபராசக்தி பச்சையம்மன் மகாமேரு கோபுர ஆலயம், இவ்விரு ஆலயத்தின் நிர்வாகத்தைத் திருவாளர் மதிவாணன் குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர்.

இவர்கள் மேற்கண்ட ஆலயங்களை நிறுவிய விதம் பாராட்டிற்குரியது. இரண்டு தலைமுறையாக கிட்டத்தட்ட அறுபது ஆண்டு தைப்பிங் மண்ணிலே உழைத்த உழைப்பிற்கு அம்மாநில அரசாங்கம் கொடுத்த பத்து ஏக்கர் நிலத்தைப் பச்சையம்மன் வழிபாட்டிற்கும் முருக வழிபாட்டிற்கும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இவர்களும் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பின்பற்றக்கூடிய தலம் மற்றும் புராண விதிமுறைகளைப் பின்பற்றி ஆலயத்தைக் கட்டமைத்திருக்கிறார்கள். மேலும் சிறிய மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் போன்ற அமைப்பிலேயே இக்கோவில் காணப்படுகிறது. பக்திக்கும் மரியாதைக்கும் உரிய ஆலயமாகத் திகழ்கிறது. இனம், மொழி, சமயம் வேறுபாடு இல்லாமல் பொதுமக்கள் இறைவழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். இவ் ஆலய வளாகத்தில் வானளாவிய முருகவேல் ஒன்று நட்டு வைத்திருக்கிறார்கள்.



இதனைக் காணும் போது வேல்வேல் வெற்றிவேல், காக்க காக்க கனகவேல்காக்க என உரக்கச்சொல்லி ஒலி எழுப்ப, துள்ளாத மனமும் துள்ளும். நகர நாகரிக மக்கள் கூட தொலைவில் உள்ள இவ் ஆலய திருவிழாக்காலங்களில் கலந்து கொள்கின்றனர். சித்திரைத் திருவிழா, தைப்பூசவிழா காலங்களில் பக்தி பட்டிமன்றம் நிகழ்த்தப் பெறுகிறது.

## *பத்துமலை முருகன் - மலேசியா (குகைக் கோயில்)*

மலேசியா இஸ்லாமிய நாடு என்றாலும், - இந்துக்களுக்கோ, இந்துக் கோயில்களின் வளர்ச்சிக்கோ தடையாக இல்லை, இந்து சமய மக்களுக்கு ஆதரவாகவே இருக்கிறது.

உலகத் தமிழர்களை கவர்ந்து கொள்ளும் ஒரு முருகன் தான் மலேசிய பத்துமலை முருகன் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள திருத்தணி முருகன் கோயில் போலவே பத்துமலை முருகன் கோயிலும் நிலத்தின் தரை தளத்தில் உள்ள ஓங்கிய உயர்ந்த முருகனை தரிசனம் செய்து விட்டு. படிக்கட்டு வழியாக மேலே சென்று அண்ணந்து பார்த்தால் இயற்கையின் எழில் சூட்சுமம் அல்லது இரகசியம் இவற்றை நம்மால் உணரமுடியும்.

குகைக்கோயிலையும் குகையாக குடைந்து காணப்படும் மலை அழகையும் நம்மால் கண்ணுற முடியும் இக்கோயில் தமிழகம் போலவே



முருகன் கோயிலை மக்கள் சுப்பிரமணியன் என்றே சொல்லுகிறார்கள் (சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சிய கடவுளும் இல்லை) முருகன் எழுந்தருளியிருக்கும் குகை இயற்கையாக அமைந்தது சிறப்பு. இவ்வாறு இருக்கும் குகையை தக்க இடமாக கருதி (குன்று (அ) குகை இருக்குமிடமெல்லாம் முருகன் இருப்பான் என்பதை தமிழகம் வழி மலேசியாவிலும் மேலும் கோலாலம்பூர் மாரியம்மன் கோயிலை நிறுவிய தம்புசாமிப்பிள்ளை என்பவர்தான் முருகனை இங்கே மூலவராக 1888ஆம் ஆண்டில் வைத்து வழிபடச் செய்தவர் என்று தற்போதுள்ள அறங்காவலர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மேலும் தரைதளத்தில் உள்ள முருகன் சிலை 140 அடி ஆகும். இவ்வுளவு உயரமான முருகன் சிலை தமிழகத்தில் கூட கிடையாது. இச்சிலை - 2006 இல் நிறுவப்பட்டதாக கூறுகிறார்கள். மேலும் தமிழகத்தைப் போலவே மலேசிய தமிழர்கள் கொண்டாடும் மிகப்பெரிய விழா தைப்பூசம் தான். தமிழகத்தை விட மிகக் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். காவடி எடுத்தல், தேர் செய்து இழுத்தல், அலகு குத்துதல், என எல்லாம் நடக்கிறது.

கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் கூடுவதாக பொதுமக்களும் குறிப்பிடுகிறார்கள் நாள்தோறும் இக்கோயிலுக்கு மூவாயிரம் (3000) முதல் 5000 (ஐயாயிரம்) பக்தர்கள் உள்ளூர் மக்களாகவும் சுற்றுலா பயணிகளாகவும் வருகை புரிகிறார்கள். சீனமக்களும் இனவேறுபாடு கருதாது முருகனை வழிபடுகிறார்கள். மேலும் நம் நாட்டு கோயிலைப் போலவே பத்துமலை முருகன் கோயில் அடிவாரத்தில் திருமால், சிவன், பிள்ளையார், நவக்கிரகம் மற்றும் அனுமன் என பல்வேறு தெய்வங்களுக்கும் சிலைகள் உள்ளன.

## *இலங்கையில் கதிர்காமம்*

**கடம்பனொரு காவடி, இடும்பன் ஒரு காவடி**
**கானாத இலட்சம் கோடி கண்டவர்கள் பாடவும்**
**கைகொட்டி ஆடவும் கந்தவேல் நின்றாடவும்**
**கடகடவென மயிலேறி வருகுவாய்**
**கதிர்காம வேல் முருகனே**

(திருப்புகழ் - அருணகிரிநாதர்)

என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ் இப்பாடலுக்கு ஏற்ப இலங்கை - கதிர்காமம் முருகன் கோயில் மிகப் பழமையான கோயில் என அறிய முடிகிறது. இங்கு இருக்கும் முருகன் சிலையாக இல்லை. முருகன் பதாகையில் காட்சி தருகிறான்.

ஒரு காலத்தில் சிறிய கொட்டகையில் இருந்த கோயில் மெல்ல மெல்ல வளர்ந்து பல ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்திருக்கிறது. இலங்கையிலே



பணமழை பொழியும் கோயில் இதுதான் என்கிறார்கள். மேலும் இக்கோயிலுக்கு சிங்களவர்கள் தான் பெருமளவு வருகிறார்கள். காரணம் கலிங்கப் போருக்கு பின் புத்தமதத்தை இலங்கையில் பரப்ப அசோக மன்னன் தன் மகன் மகனை அனுப்பி போதி மரக்கிளையை நடச் செய்தானாம். அதனால் சிங்களவர்கள் கதிர்காமத்தே தன் கோயிலாக பார்க்கிறார்கள். கதிர்காம முருகன் கோயிலை சிங்களவர்கள் தான் நிர்வகிக்கிறார்கள் - பூசை செய்பவர்களும் சிங்களவர் தான்.

ஒரு வியப்பு என்னவெனில் வெள்ளாடை உடுத்தி முருகனை வழிபடுவது ஒரு மரபாக இருக்கிறது. மேலும் வழிபட வரும் போது பழக்கூடைகளை கொண்டு வர வேண்டுமாம். இதனை பூசாரிகள் எடுத்து முருகனுக்குப் படையல் செய்து பாதியை எடுத்துக்கொண்டு மீதியை பக்தர்களிடம் ஒப்படைப்பார்களாம்.

முருகனை வழிபட வெறுங்கையுடன் வந்தால் பணம் போடுங்கள் என்று பூசாரிகள் சொல்வதும் தமிழகத்தைப் போலவே பணம் கொடுத்தால் நெருக்கத்தில் காட்சி, இல்லையென்றால் தூரத்தில் காட்சி என்பதைக் காட்டுகிறது.

மேலும் குறிப்பாக காழிப்பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்ற திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற திரிகோண மலையில் உள்ள திருகோணேஸ்வரர் தலம் சிறப்பிற்குரியது. ஆக அருளாளர்களும் தன்னளவில் அயல் நாட்டில் திருக்கோயில்களைப் பாடியுள்ளனர்.

## *சைவசித்தாந்த மன்றம் - கோலாலம்பூர்*

கி.பி. 14ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை சமயப் பணி செய்துவரும் திருவாவடுதுறை மடத்தாரை நாம் போற்றியாக வேண்டும். தெ.பொ.மீனாட்சி சுந்தரம் மற்றும் உ.வே.சா போன்ற தமிழறிஞர்களுடன் தொடர்புடைய மடம். மேலும் இந்தியா விடுதலை பெற்றபோது இம்மடத்தின் செங்கோல் தில்லி மாநகரத்திற்கு அன்றைய தம்பிரான் சுவாமிகள் கொண்டு சென்று தமிழ்மறை பொருளை ஓதி உணர்ந்து பண்டித ஜவஹர்லால் நேரு திருக்கரத்தில் ஒப்படைத்த விடுதலை வரலாறு ஒருபுறம். இருப்பினும் இந்தியா முழுமையும் மடங்கள் சமயப்பணி செய்தாலும் கடல் கடந்து கோலாலம்பூர் மையப்பகுதியில் கிளைமடம் நிறுவி இந்து சமயத்தின் அறநெறியை அருளாசி பெற்றவர்களாலும், சமய சொற்பொழிவு நிகழ்த்துபவர்களாலும் செம்மையாக போதித்து வருகிறார்கள். குறிப்பாக 63 நாயன்மார்கள் வரலாறு குறித்தும், சைவ சமயத்தின் திருப்பணிகள் குறித்தும் புலமையுடையவர்களை அழைத்து சொற்பொழிவு ஆற்றச் செய்வதும் பாராட்டுக்குரியது. மேலும் சைவ சித்தாந்த மன்றத்தின் சார்பாக சைவ மரபையும் தமிழரின் பக்தி நெறியையும் போற்றி வருகிறார்கள்.

## *நிறைவாக*

தெற்காசிய நாடுகளில் தமிழர்களிடையே அவர்கள் பண்பாட்டளவில் இறைநெறி (அ) பக்தி நெறி கலந்துள்ளது. ஒரு மனிதன் பண்பட 1. ஒழுக்கம், 2. கல்வி, 3. அறிவு, 4. அன்பு, 5. அருள், 6. துறவு (விட்டுக் கொடுத்தல்) என ஆறு படிநிலைகளைக் கைக்கொண்டால் மனம் பக்குவமடையும். ஒருவர் இப்படி கேட்கலாம். இந்த ஆறும் போதுமா என்று உப்பிட்ட பாண்டம் (அ) அறுசுவை உணவை முறையாக உட்கொள்பவராக இருந்தால், ஐம்புலன்களையும் கட்டுப்படுத்துபவராக இருத்தல், உதாரணமாக

1. **உரன்என்னும் தோட்டியன் ஓர்ஐந்தும் காப்பான்**<br>**வரன் என்னும் வைப்பிற்குஓர் வித்து. (குறள் 24)**

2. **சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ**<br>**நன்றின்பால் உய்ப்பது அறிவு. (குறள் 422)**

3. **அடக்கம் அமரருள் உய்க்கும் - அடங்காமை**<br>**ஆரிருள் உய்த்து விடும் (குறள் - 121)**

மூன்று திருக்குறளும் மனிதனுடைய வாழ்வியல் நெறிக்கு சொன்னவைதான் இதனடிப்படையில் சமயத்தின் வழி பக்தி ஒருவனை நெறிபடுத்துகின்றது. மேலும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய இயற்கையோடு இயைந்துவாழ இறைபக்தி தேவையாகிறது. எனவே கடாரம் கொண்டான் என்று பெயர் பெற்ற இராசேந்திர சோழன் தொடங்கி இன்று உள்ள பல்வேறு அமைப்பினர் தன்னளவில் தெற்காசிய நாடுகள் முழுவதும் தமிழ் சமய நெறியைப் பரப்பி வருவதை அறிய முடிகிறது.

# புறந்தள்ளுங்கள்

**டாக்டர் ஃபஜிலா ஆசாத்**
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

ஒருவரைப் பற்றி பேசுவதற்கு பதிலாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டால் இந்த உலகில் பெரும்பாலான பிரச்சனைகள் மறைந்து விடும்.

- ரொனால்ட் ரீகன்

ஏதோ ஒரு நிகழ்ச்சிக்கோ மீட்டிங்கிற்கோ செல்லும்போது நீங்கள் அங்கிருப்பவர்களிடம் சகஜமாக சந்தோசமாக பழகிக் கொண்டிருக்க அதில் சில பேர் உங்களை அவாய்ட் பண்ணுவதுபோல பட்டும் படாமலும் பழகிய அனுபவம் உங்களுக்கு என்றேனும் நிகழ்ந்துள்ளதா?

திடீரென என்ன ஆயிற்று இவர்களுக்கு, நன்றாகத்தானே பழகிக் கொண்டிருந்தார்கள் என்று பலவாறு உங்களை நீங்களே கேள்வி கேட்டு அவர்களுடன் அன்று வரை நடந்த நிகழ்வுகளையெல்லாம் திரும்பத் திரும்ப மனதில் ஓட விட்டு ஏதேனும் தவறுதலாக நடந்ததா என்றெல்லாம் ஆராய்ந்து, ஒன்றும் புரியாமல் குழம்பிய மனதுடன், சென்றிருந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியாமல் தவிர்த்திருப்பீர்கள்.

உங்களைப் பற்றி ஏற்கனவே யாரோ ஏதோ சொல்லி அங்கிருந்தவர்களிடம் உங்களைப் பற்றிய ஒரு தவறான புரிதலை ஏற்படுத்தி இருந்து பின்பு அதனை அறிய வரும்போது உங்களுக்குள் ஏற்படும் இயலாமையும் வருத்தமும் உங்களைச் சோர்வடையச் செய்யும். உங்களைப் பற்றிய தவறான எண்ணங்களை எப்படிச் சரி செய்வது என்று உங்கள் மனம் பதறும்.

இது உங்களுக்கு மட்டும் ஏற்படும் அனுபவம் அல்ல. பல குடும்பங்களில் மட்டும் நடக்கும் விஷயமும் அல்ல. வளரும் நாடுகளிலும், வளர்ந்த நாடுகளிலும், மிகவும் நாகரிகமானவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடியவர்கள் மத்தியிலும் prevail ஆகிக் கொண்டிருக்கும் பழக்கம்தான் இது என்கிறது வாழ்வியல்

உலக அளவில் 60 சதவீதம் மக்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் ஏதேனும் பேசுகிறார்கள் என்கிறது மேலை நாட்டு ஆய்வு ஒன்று. மேலும், சிலர் மற்றவர்களைப் பற்றி தாழ்வாக பேசுவது தங்களை உயர்வாக நினைக்கச் செய்யும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு விசயத்தைத் தாங்கள் சொல்வது அவர்களுக்கு இன்ட்ரெஸ்டிங்காக இருக்கிறது. ஆனால் உண்மையில் புறம் பேசுபவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளவே செய்கிறார்கள். இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள்

அல்ல என்ற எண்ணத்தைத்தான் பிறர் மனதில் விதைக்கிறார்கள் என்கிறது அந்த ஆய்வின் முடிவு.

புறம் பேசுதல் என்பது ஒருவரைப் பற்றி தவறாக நெகடிவாக அவர் இல்லாத போது மற்றவர்களிடம் பேசுவது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவர் இன்னொருவரைப் பற்றி அவர் இல்லாத போது பேசுகிறார் என்னும்போதே அதன் உண்மைத்துவம் கேள்விக்குறியதாகி விடுகிறது. அத்துடன் சொல்பவரின் நம்பகத் தன்மையும் இடறுகிறது.

மனரீதியாக தன்னம்பிக்கை இல்லாதவர்களும் பிறருடைய கவனத்தை தாங்கள் கவர வேண்டும் என நினைப்பவர்களுமே பெரும்பாலும் மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவார்கள். புறம் பேசப் படுபவர்களை மட்டுமல்ல பேசுபவர்களையும் கேட்பவர்களையுமே அது மனரீதியாகப் பாதிக்கும் என்கிறது மனஇயல்.



பொதுவாக புறம் பேசுபவர்கள் தங்களை நியாயப் படுத்திக் கொள்ள சொல்லக் கூடிய வார்த்தைகள் 'நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்... வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடக் கூடாது என்பதற்காகத்தான்...' என்பது போன்றே இருக்கும்.

இப்படி நல்லது கெட்டதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு விழிப்புணர்வைக் கொடுப்பதற்காகவும் தான் சொல்கிறோம் என்பார்கள். ஆனால் அதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு கல்லூரியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை சில நாட்கள் ஒரு குழுவாகப் பழக வைத்தார்கள். பின் அவர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து அவர்களுக்குள் பலருக்கும் பிடித்த இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து ஒரு பிரிவினரிடம் அந்த இரண்டு பேரைப் பற்றிய நல்ல விஷயங்களைச் சொல்லச் சொன்னார்கள். அத்தனை பேரும் அவர்களைப் பற்றிய நல்லவற்றைச் சொன்னர்கள்.

பின் அதே இரண்டு பேரைப் பற்றி அடுத்த குருப்பிடம் அவர்களிடம் இருக்கும் தவறான விஷயங்களைப் பற்றிச் சொல்லச் சொன்னார்கள் அத்தனை பேருக்கும் சொல்லுவதற்கு விஷயம் இருந்தது.

ஆக அந்த இரண்டு பேரும் நல்லவரா... தீயவரா? இப்போது என்ன முடிவுக்கு வர முடியும். உண்மையில் எதை நீங்கள் தேடினாலும் அந்தந்த கோணத்தில் அது உங்களுக்குக் கிடைக்கும் என்பதே அந்த ஆய்வின் முடிவு.

குறைகள் இல்லாத மனிதன் உலகில் இல்லை எனும்போது யார் ஒருவரிடமும் என்ன தவறு இருக்கிறது என்று பார்க்க முனையும் போது நிச்சயமாக ஏதாவது ஒரு தவறுதான் தெரிய வரும். அல்லது ஏதாவது ஒன்றைத் தவறாக எடுக்கத் தோன்றும்.

ஏனென்றால் ஆழ்மனதின் filtering system, தன் தேவைக்கு ஏற்ப ஒன்றை அனுமானித்துக் கொள்ளும். நீங்கள் என்ன தேடுகிறீர்களோ அதைத் தான் உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்.

உங்கள் ஆழ்மனதிற்கு நீங்கள் நல்லவற்றைப் பார்க்க பழகிக் கொடுக்கிறிர்களா அல்லது தீயவற்றைப் பார்க்கப் பழகிக் கொடுக்கிறீர்களா என்பதே பிரச்சனைக்கும் தீர்வுக்குமான வேறுபாடாக இருக்கிறது.

உங்கள் ஆழ்மனதால் மனிதர்களையும் பொருட்களையும் கூட பிரித்துப் பார்க்க முடியாது. நீங்கள் யாரேனும் ஒருவருடைய தவறுகளை உற்றுப் பார்க்கிறீர்கள் என்றால், அது எல்லாவற்றிலும், அதாவது பிற மனிதர்களாகட்டும், அல்லது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளாகட்டும், அல்லது உயிரற்ற பொருட்களாகட்டும், நீங்கள் சந்திக்கும் அனைத்து விஷயங்களிலுமே நெகடிவான செய்திகளையே உங்கள் கண்ணில் படச்

செய்யும். அது போல் பிறரிடம் சென்று செய்திகளை பேசக் கூடியவர்களுக்கு எதைப் பார்த்தாலும் அதை மற்றவர்களிடம் எப்படி சொல்வது என்ற கோணத்திலேயே தான் அவர்கள் மனம் பார்க்குமே தவிர உண்மையில் ஒரிஜினலான விஷயத்தை தனக்குள் பதிய வைத்துக் கொள்ளாது.

பொதுவாக நெருப்பு என்று சொன்னால் சுட்டு விடவா போகிறது. வார்த்தைகள் வலிக்கக் கூடாது என்பார்கள். வார்த்தைகள் வலிக்கும் காலமிது என்று sociology சொல்வது ஒரு புறம் இருக்க, வார்த்தைகளுக்கு மட்டுமல்ல எண்ணங்களுக்கும் நம்முடைய நரம்பு மண்டலத்திற்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது என்கிறது நியூராலஜி. அதனால் தான் இன்று பாஸிடிவ் சைக்காலஜி பல பிரச்னைகளுக்கும் நேர்மறையான வார்த்தைகளால் தீர்வைத் தருகிறது.

புறம் பேசுவது என்பது கேட்பவருக்கும் பேசுபவருக்கும், ஏதோ அந்தக் காதில் வாங்கி இந்தக் காதில் விடும் சங்கதி அல்ல. ஒரு குதிரையின் வாயில் பூட்டப் படும் லகான் எப்படி அதன் முழு இயக்கத்தையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருமோ அது போல் அது உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும் கொடுக்கப்படும் சமிக்ஞை. எதிர்மறையான சிந்தனைகள் ஒருவரின் எண்ணங்களைத் தன்னையே சுற்றிச் சுற்றி வரச் செய்து மன அழுத்தத்தை ஏற்படுத்தி விடும்.

தவிர, பேசப்படும் செய்தி உண்மையாகவே இருந்தாலும், ஒருவரைப் பற்றிய நெகட்டிவான விஷயங்களை உற்று நோக்குவது, பேசுபவர், பேசப் பட்டவர், அதை கேட்டுக் கொண்டிருந்தவர் என எல்லோருக்குள்ளும் ஒரு நெகடிவிட்டியை பரப்பி விடும்.

அதற்குப் பதிலாக, ஒருவரைப் பற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தால் அவர்களுடைய நல்ல கோணத்தைத் தெரிந்து கொள்ளச் செய்யலாமே. அது பேசப்பட்டவர்களின் நல்ல செயலை மேலும் தூண்டும்.

தங்களைப் பற்றி இருக்கும் இமேஜை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். தங்களுக்குக் கிடைத்த அங்கீகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலை அவர்களுக்குள் எழுப்பும். சொன்னவரைப் பற்றியும் நல்ல அபிப்ராயத்தைத் தரும். பிறருடனான உறவுகள் வலுப் பெறும்.

நீங்கள் ஒருவரைப் பற்றி நீங்கள் என்ன பேசுகிறீர்களோ அது முதலில் நீங்கள் யார் என்பதையே பிரதிபலிக்கும். தவிர அது அவருக்கு என்ன விளைவை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அந்த விளைவு உங்களிடம் இருந்தே ஆரம்பம் ஆகும். மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவது அவர்களுக்குத் தரும் மறுமலர்ச்சி அல்ல அது உங்களுக்கே மகிழ்ச்சித் தரக் கூடியது. இதைப் புரிந்து கொண்டால் மகிழ்ச்சி மனதில் நிறையும்.

❑

# எழுத்துக்காரன்

## கரந்தை ஜெயக்குமார்

நடக்கக் கற்று
நாலடி வைப்பதற்குள்
ஓடு என்றார்கள்
ஓடலானேன்

கைதட்டல்கள், வாழ்த்துக் கூச்சல்கள்
வேகம், வேகம், இன்னும் வேகம்

அன்னை மடியும்
இளமைக் கூத்தும்
ஓட்டத்தினூடே ஓடி மறைந்தன

ஓடும்போதே கல்யாணம் பண்ணி
கடமைகள் முடித்து
குழந்தைகள் பெற்று
குடும்பம் சுமந்து
அடைந்தால் சிரித்து
இழந்தால் அழுது

பக்தியில் நனைந்து
பயத்தில் உறைந்து
நரைக்க, நரைக்க
நாட்கள் பறக்க
இறைக்க, இறைக்க
ஓடிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் எனக்கு
உண்மை புரிந்தது...
பந்தயம் என்றோ
முடிந்து போனது

நான் வெறும்
பழக்கதோஷத்தில்
ஓடிக் கொண்டிருக்கிறேன்.

பழக்கதோஷத்தில் ஓடுகிற பந்தயக் குதிரையாக, இன்றைய வாழ்வு நம்மை மாற்றியிருக்கிறது அல்லது இன்றைய வாழ்விற்காக நாம் மாறியிருக்கிறோம்.

இது நல்லதல்ல

வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்வோம்

இலக்கியத்தோடு இயைந்த வாழ்க்கையாய் வாழ்வோம்

ஏன், இலக்கியத்தோடு இயைந்து வாழ வேண்டும்?

இலக்கியம் என்ன செய்யும் ?

என்னதான் செய்யாது

இலக்கியம் ஒரு தனி மனிதனையோ, ஒரு நாட்டையோ என்ன வேண்டுமானாலும் செய்யும்.

இலக்கியம் மனிதனை உயர்த்தும்

வாழும் நெறிமுறைகளை உணர்த்தும்

ஏதென்சு நகரில் ஒரு மாபெரும் கண்காட்சி நடைபெற்றது. விலையுயர்ந்த, கண்கவர் பொருட்கள் எல்லாம் விற்பனைக்கு வைக்கப்பெற்று, காண்போரை சுண்டி இழுத்தன.

ஒரு சிறு கூட்டம், இளைஞர்களின் கூட்டம், கண்காட்சியைக் காணாமல், கண்காட்சிக்கு வருபவர்களைக் கவனிக்கத் தொடங்கியது. யார் இந்த ஊரிலேயே அதிகப் பணக்காரர் என்பதைத் தீர்மானிக்கக் கவனித்தார்கள்.

யார் விலையுயர்ந்த பொருட்களை, அதிக எண்ணிக்கையில் வாங்குகிறார்களோ, அவரே பெரும் பணக்காரர் என்று முடிவு செய்து, அந்தப் பெரும் பணக்காரரை அடையாளம் காண, அந்தக் குழு காத்திருந்தது, கவனித்துக் கொண்டிருந்தது.

சாக்ரடீஸ் வந்தார்

இளைஞர்களைக் கண்டார்

நோக்கம் அறிந்தார்

சிரித்தார்

நான்தான் ஏதென்சிலேயே பெரும் பணக்காரன் என்றார்

இளைஞர்கள் குழு திகைத்தது

பரம ஏழையான இவரா பெரும் பணக்காரர்?

புரியவில்லையே எப்படி? என்றது

எனக்கு இங்கிருக்கும் பொருட்கள் எதுவுமே தேவையில்லை.

தேவைகள்தான் ஒரு மனிதனை ஏழையாகவோ, பணக்காரனாகவோ

மாற்றுகிறது. எனவே நான்தான் பணக்காரன் என்றார்.

இதுதான் இலக்கிய மனம்

இலக்கிய மனம்தான் பெரும் செல்வம்

அடக்கமுள்ளவனாக, பணிவுள்ளவனாக ஒருவரை மாற்றுவதுதான் இலக்கியம்.

இலக்கியம் நம்மை குழந்தையாக்கும்

**ஜன்னல் வழியே - வேடிக்கை பார்**
**எனக் காட்டினேன்**
**ஜன்னலைக் கண்டு**
**சிரித்தது குழந்தை.**

இதுதான் இலக்கிய மனம். மனதில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தால் சிரிப்பு வரும். குழந்தைத் தன்மை வளரும்.

என் பெயரன் ஒரு யானைப் படம் வரைந்து கொண்டிருந்தான் யானைக்கு கருப்பு நிறம் கொடுப்பதற்கு பதில், பல்வேறு வண்ணங்களால், யானைக்கு நிறம் கொடுத்தான்.

யானை கருப்பாகவல்லவா இருக்கும் என்றேன். இது Rainbow Elephant என்றான். வானவில் யானை என்று ஒன்று எங்கும் கிடையாதே என்றேன்.

இதோ இருக்கிறதே என்று, தான் வரைந்த படத்தைக் காட்டினான்.

இதுதான் இலக்கியம்.

இலக்கியம் என்பது புத்தக வாசிப்போடு மட்டும் சம்பந்தப்பட்டது கிடையாது. புத்தகங்களை மட்டும் வாசித்தால் போதாது. மரம், சொடி, கொடிகளையும் வாசிக்க வேண்டும். இந்த உலகை வாசிக்க வேண்டும்

**எழுத்துக் கூட்டிப்**
**புத்தகத்தை வாசிப்பது போல**
**இலைகளைக் கூட்டி**
**மரங்களை வாசிக்க வேண்டும்**

**ஒவ்வொரு கிளையாகப் - பிரித்து**
**வாசிக்க வேண்டும்**
**ஒவ்வொரு மரத்தையும் - அதன்**
**காயங்களுடன் சேர்த்து வாசிக்க வேண்டும்**

**மரங்களை**
**கீழிருந்து மேலாகவும்**

மேலிருந்து கீழாகவும்
வாசிக்க வேண்டும்

மரங்கள்
பூச்சிகளின் பிரபஞ்சம் - நீ
பூச்சியாய் மாறினால் - இலைகளின்
நுனிவரை செல்லலாம்

இலைகளில் இருப்பவை
நரம்புகள் அல்ல
அவை தாவர லிபி (எழுத்துக்கள்)
அவ்வளவும்
பாட்டு, பாட்டு, பாட்டு

இலைகளின் பாடலை
காற்று இசைக்கும்
பூச்சியாகி உற்று கேள் புரியும்.

பறவைகளின் பாட்டெல்லாம்
இலைகளிடம் கற்றதுதான்
பாட்டு முடிந்தவுடன் - இலையும்
பழுத்து விழுந்து விடும்

மரத்தின் அர்த்தத்தை
நிழலில் தேட வேண்டாம்
அங்கே இளைப்பாறு

மரத்தின் அர்த்தத்தை
இலக்கியமாக்கி
மரத்தை வாசித்தபடி
ஒரு பூச்சிபோல்
நகர்ந்து கொண்டே இரு
வாழ்க்கை மாறிவிடும்
மரப்பிரசாதம்.

இலக்கியங்களை வாசியுங்கள். இலக்கியத்தின் ஏதோ ஒரு சொல், ஒரு வரி, உங்கள் வாழ்க்கையையே முற்றாய் புரட்டிப் போடலாம். எனவே இலக்கியத்தை வாசியுங்கள். இலக்கிய வெளிச்சத்தில் வாழ்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள், நலமாக்கிக் கொள்ளுங்கள்.

❑

# கலை இலக்கியக் களநாயகர் இரா. காமராசு

*நேர்காணல்:*
***முனைவர் அ. அனிதாபரமசிவம்,***
ஸ்ரீ பாலமுருகன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சாத்தப்பாடி,
சேலம்.

***பிறப்பு, கல்வி, பணி பற்றி ...***

நான் இன்றைய திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்திற்கு அருகிலுள்ள மேலவாசல் என்னும் சிற்றூரில் பிறந்தேன். நான் எளிய வேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவன். தொடக்க, உயர்நிலைக் கல்வியை இங்குள்ள திருமுருகன் பள்ளியில் முடித்தேன்.

பிறகு ஆடுதுறை அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இடைநிலை ஆசிரியப் பட்டயப் பயிற்சி பெற்றேன். பின்னர் தனிமுயற்சியில் பயின்று தமிழில் எம்.ஏ., பி.எட்., எம்ஃபில்., பட்டங்கள் பெற்றேன். தத்துவத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றேன். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பெ. மாதையன் அவர்களிடம் பயின்று முனைவர் பட்டமும் பெற்றேன்.

தொடக்கப் பள்ளி ஆசிரியராக, தலைமையாசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றினேன். 2007ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தேன். 2018 ஜுன் மாதம் முதல் நாட்டுப்புறவியல் துறையில் பேராசிரியர் மற்றும் தலைவராகவும், மொழிப்புலத் தலைவராகவும் பணியாற்றி வருகிறேன்.

***தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தில் மாநிலப் பொறுப்பிற்கு எப்படி வந்தீர்கள்?***

எனக்கு இளம் பருவத்திலிருந்தே மேடைப்பேச்சில் ஆர்வமுண்டு. பள்ளியளவில் பல பரிசுகளும் பெற்றுள்ளேன். இலக்கிய நாட்டமும் அதிகமுண்டு. சமூக அக்கறையோடு அநீதிகள் கண்டு ஒருவித எதிர்ப்பு மனசுக்குள்ளேயே இருக்கும். ஆசிரியப் பணிக்குச் சென்ற பின்னர் ஆசிரியர் இயக்கங்களில் ஈடுபட்டேன். பொருளாதாரப் போராட்டங்கள் சலிப்பைத் தந்தன. இலக்கியம் படிக்கவும் படைக்கவும், மக்களிடம் செல்லவும் தோழர்கள் பலர் வழிகாட்டினர். கலை இலக்கியப் பெருமன்றத்துக்கு வந்து சேர்ந்தேன்.

தமிழ்நாட்டின் அற்புதமான தலைவர் ஜீவா தொடங்கிய பேரமைப்பு. நா.வா., தொ.மு.சி., பாலன், தா.பா., பொன்னீலன், தனுஷ்கோடி, சிற்பி,

அடிகளார், ஆ.சி., போன்றோர் வழிநடத்திய இயக்கம். கிளைச்செயலர், மாவட்டச் செயலர், மாநிலச் செயலர் எனப் பல நிலைகளில் செயல்பட்டு இன்று பொதுச்செயலாளர்.

சுமார் 30 ஆண்டு பயணம். கற்றதும் பெற்றதும் ஏராளம். எழுத்தாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், உழைக்கும் மக்களுடன் நெருங்கிப் பழக எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு. கார்க்கி சொல்வது போல, யான் பயின்ற மக்கள் பல்கலைக்கழகம் இது.

*படைப்பில் ஈடுபாடு....*

நான் தொடக்கத்தில் கவிதைகள் அதிகம் வாசித்தேன். மொழிபெயர்ப்பிலும் கூட. இன்குலாப் என்னை வசீகரித்தார். நானும் எழுதத் தொடங்கினேன்.

ஜனசக்தியில் "வெண்மணி" குறித்து எழுதிய கவிதையை கட்டம் கட்டிப் போட்டார்கள். அறந்தை நாராயணன் தான் எழுதிய "எரிமலை" பகுதியில் "பாரதியின் வாரிசுகள்" எனப் பாராட்டி எழுதினார்.

அப்புறம், சிற்றிதழ்களில் எழுதினேன். முதல் தொகுப்பு "கணவனான போதும்" நாகை ராஜு புத்தக நிலையம் வெளியிட்டார்கள். அடுத்த தொகுப்பு "நப்போல்வளை" காவ்யா வெளியிட்டது.

முதல் தொகுப்புக்கு பாரத ஸ்டேட் வங்கி பரிசு கிடைத்தது. எழுத்தாளர் சு. சமுத்திரம் விருதோடு விருந்தும் கொடுத்தார். திருப்பூர் தமிழ்ச்சங்கப் பரிசும் இத்தொகுப்புப் பெற்றது. நா. முத்துக்குமாரின் பட்டாம் பூச்சி விற்பவனும் அப்போது பரிசு பெற்றது. திரைப்பட நடிகர் சிவக்குமார் பரிசு வழங்கிப் பாராட்டினார்.



தொடர்ந்து சிறுகதைகள் எழுதினேன். “மகளுக்குச் சொல்ல” எனும் தொகுப்பை என்சிபிஹெச் வெளியிட்டது. இத்தொகுப்பும் நிறைய வரவேற்பைப் பெற்றது. ஆய்வு, அமைப்பு, பிறர் நூல்களை அறிமுகம் செய்தல்.... என கட்டுரைகள் எழுதி எழுதி படைப்பில் சுணக்கம் வந்துவிட்டது மீளனும். இனி எழுதனும்.

## *சாகித்திய அகாதெமி உறுப்பினராய் இருந்த அனுபவம்...*

சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராக ஐந்தாண்டுகள் இருந்தேன். கவிஞர் சிற்பி அவர்கள்தான் இவ்வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள். பேராசிரியர் கி. நாச்சிமுத்து அவர்கள் தலைமையில் செயல்பட்டோம். தமிழ்நாட்டின் பல இடங்களிலும் பல கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்தினோம். அதுவரை கவனம் பெறாத படைப்பாளிகளைக் கௌரவித்தோம்.

பல நூல் தொகுப்புகளில் பல இளையவர்களின் எழுத்துக்களை இடம்பெறச் செய்தோம். தமிழ்நாட்டுக்கு வெளியே இந்தியாவின் பல பகுதி எழுத்தாளர்களை, இலக்கியப் போக்குகளை அறிய இப்பொறுப்பு வாய்ப்பாக அமைந்தது.

அரசு சார் அமைப்பின் பலமும் பலவீனமும் அகாதெமிக்கும் பொருந்தும். விருப்பு வெறுப்பற்று மக்கள் வரிப்பணம் ஜனநாயக அடிப்படையில் பயனுற முயல்வதே சரி. ஓரளவு இதில் வெற்றிபெற்றதாகவே நினைக்கிறேன்.

## *படைப்புக்கும் ஆய்வுக்கும் உள்ள தொடர்வு குறித்து....*

படைப்பு உணர்வு சார்ந்தது. உள்ளத்து உணர்ச்சிப் பிழிவு. படைப்பாற்றல் அரிய ஓர் இயல்பூக்கம். கண்ணதாசன் சொல்வது மாதிரி படைப்பதனால் இறைவன் என்பது சரியே. ஓர் படைப்பாளி இன்றைய வாழ்வை மட்டுமல்ல. வருங்கால - நாளைய - வாழ்வையும் படைத்து விடுகிறான்.

ஆய்வு அறிவு சார்ந்தது. சமூக விழுமியங்கள் எனும் துலாக்கோலில் நிறுவப்படுவது. இன்று படைப்பும் ஆய்வும் ஒன்றுடன் ஒன்று கலந்து வருகின்றன. பெரும் நாவல்கள் வரலாறு, பண்பாடு சார்ந்த ஆவணங்களாக வெளிவருகின்றன. ஆய்வு - ஆய்வு நடை படைப்பூக்கத்தோடு பலநூல்களில் முன்னெடுக்கப்படுகிறது. படைப்போ, ஆய்வோ சமூகம் சார்ந்தும், உண்மை சார்ந்தும், மக்கள் வளர்ச்சி சார்ந்தும் அமைவதே நல்லது. சிறப்பானது.

## *நாட்டுப்புறவியல் துறை தற்போது எப்படி உள்ளது?*

நான் தமிழ் நாட்டுப்புறவியலின் தந்தை எனப் போற்றப் பெறும் பேராசிரியர் நா.வானமாமலை குறித்த ஆய்வினை மேற்கொண்டதன் வாயிலாக இத் துறை க்கு வந்து சேர்ந்தேன். நாட்டுப்புறவியல் துறையில்

தொடக்கத்தில் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்தல், கதைகள், கதைப்பாடல்களைச் சேகரித்தல், பழமொழிகள், விடுகதைகள் உள்ளிட்ட இலக்கியச் சேகரிப்பும் ஆய்வும் நடைபெற்றன. பின்னர் நாட்டுப்புறக் கலைகள் குறித்தவை சிறப்பிடம் பெற்றன. மேலைநாட்டுக் கோட்பாடுகள் வழியே நம்பிக்கைகள், சடங்குகள், வழக்காறுகளை ஆய்வு செய்தார்கள்.

தற்போது நாட்டுப்புறவியல் துறை மக்கள் சார்ந்த பண்பாட்டு ஆய்வுகளை முதன்மைப்படுத்துகிறது. பல்சமய தனித்தன்மைகள் குறிப்பாக நாட்டார் சாமிகள், நாட்டார் இசுலாம், கிறித்தவம், சமணம் குறித்த ஆய்வுகள் நடக்கின்றன.

சமூக வரலாறு - உள்ளூர் வரலாறுகள் வாய்மொழி வழி உருவாக்கப்படுகின்றன. இனவரைவியல், பண்பாட்டு மானுடவியல் போன்ற கூறுகள் அழுத்தம் பெறுகின்றன.

புழங்கு பொருள் பண்பாடும் சிறப்பிடம் பெறுகிறது. இவையெல்லாம் மைய நீரோட்ட வரலாறு, பண்பாடு ஆகியவற்றுக்கு மாற்றாக உருவாக்கப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது. உணவு, மருத்துவம், தொழில்கள், தொழில்நுட்பம் சார்ந்த பண்பாட்டு ஆய்வுகள் மேலெழுவது சிறப்பு. நாட்டுப்புறவியல் ஓர் பண்பாட்டு பலகனியாக உருமாற்றம் பெற்றுவருகிறது எனலாம்.

***தாங்கள் மேற்கொண்ட அயலகப் பயணங்கள்...***

நான் மலேஷியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேஷியா, மொரிஷியஸ், பிரான்ஸ், ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளேன். எல்லாமே தமிழ்க் கல்வி, இலக்கியம், ஆய்வு மேம்படல் சார்ந்த பயணங்கள் தான்.

தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களில் பர்மா, மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா வாழ் தமிழர்களுக்கு தமிழ்மொழி, பண்பாட்டுப் பயிற்சி அளித்தோம். தமிழ்ப்பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தன் இவற்றை ஒருங்கிணைத்தார்.

***மாணவர்கள், இளைஞர்களைத் தொடர்ந்து சந்தித்து வருகிறீர்கள். உங்கள் மதிப்பீடு என்ன?***

கல்வி நிலையங்களிலும், பொது வெளியிலும் நாள்தோறும் இளையவர்களைச் சந்திக்கிறேன். பெரும்பாலும் எல்லோரும் பொறுப்புணர்வுமிக்கவர்களாக உள்ளார்கள். மொழி மீது அளவு கடந்த பற்றும் நிலத்தின் மீதான உரிமை உணர்வும் விரவிக் கிடக்கிறது. பழம் பெருமைகளை மீட்க எண்ணுகிறார்கள். பிறர்க்கு உதவும் எண்ணம் பெருகி வருகிறது.

கட்சி, தேர்தல் அரசியல் கடந்து சிந்திக்கிறார்கள். கடினமாக உழைக்கிறார்கள். முன்னேறத் துடிக்கிறார்கள். வாசிக்கும் பழக்கம் பெருகி

உள்ளது. இளைஞர்களை குடும்பமும் சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும்.

கருத்தையோ, பொருளையோ திணிக்காமல் தாமே முடிவெடுக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். தனிமனித நேர்மை, அறம் வேண்டி நிற்கிறார்கள் நம் இளைஞர்கள். நுகர்வு கலாச்சாரம், சமூக ஊடகங்களின் தாக்கம் ஓரளவு சீரழிவைத்தான் செய்கிறது என்றாலும் தக்க முன்னுதாரணங்களால் நேர்செய்ய இயலும். நமக்குத் தேவை நல்ல சமூக முன்மாதிரிகள்!

***ஆய்வாளர்கள், படைப்பாளர்கள் முன்னேற்றம் குறித்து...***

வாழும் சமூகத்தின் முகமும் முகவரியும் படைப்பாளர்கள். அறிஞர்கள் சமூகத்தின் மனசாட்சியாகக் கருதத்தக்கவர்கள். இவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது எல்லோரின் கடமை.

அறிஞர்களும், படைப்பாளிகளும் மனசாட்சியுடன் உண்மையை உரத்துப் பேசவேண்டும். சமூக நிகழ்ச்சிகளில், போக்குகளில் தங்களின் வகிபாகத்தை தெளிவுபடுத்த வேண்டும். மௌனம் கூடாது. நடுநிலை ஏமாற்று வேலை. சமுதாய இயக்கத்தில் வரலாற்று உருவாக்கத்தில் தங்களின் பங்களிப்பை உறுதி செய்யவேண்டும்.

***தங்களின் இலக்கிய, இயக்கப் பணி நிறைவளிக்கிறதா?***

நான் ஒரு காட்டுச்செடி. எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோரின் பிள்ளை. தன் முயற்சியும், நண்பர்களின் ஊக்கமும் என்னைக் காலூன்றச் செய்துள்ளது. எனக்கு ஒளிவட்டங்கள், பின்புலங்கள் ஏதுமில்லை.

இந்த ஐம்பது வயது தொடக்கத்தில் நாற்பது நூல்கள் படைத்துள்ளேன். படைப்பு, திறனாய்வு, ஆய்வு சார்ந்த நூல்கள். என் நூல்கள் சில பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாக உள்ளன. படைப்புகள் குறித்து மூவர் ஆய்வுகள் செய்துள்ளனர். சாதனை என்பதை விட தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கி வருவதே மகிழ்ச்சி அளிக்கிறது. படிக்கவும் எழுதவும் ஏராளம் உள்ளன. காலமும் சூழலும் உடலும் ஒத்துழைக்க வேண்டும்.

***வெற்றி முனைக்கு தாங்கள் கூறும் செய்தி...***

வெற்றிமுனை இதழ் பன்முகப் பங்களிப்பினைச் செய்து வருகிறது. சமூக மாற்றத்தில் இதழ்களின் பங்கு பெரியது. வெற்றிமுனை இதனை உணர்ந்து செயல்படுகிறது. அதிகம் புகழ் வெளிச்சம்படாதவர்களைத் தேடி அவர்களின் பங்கு பணிகளைப் பதிவு செய்வது சிறப்பு. எது மாதிரியும் இல்லாத புதுமாதிரி இதழாக, தொடர்ந்து வெற்றிகளைக் குவித்திட நல்வாழ்த்துக்கள்!

❑



# நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு

முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரி,
சென்னை.

நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு
பரிவு இகந்த மனத்து ஒரு பற்று இலாது
ஒருவுனிற்னை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ஈண்டு நின்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள் - நகர்நீங்கு படலம் - 1917

கம்பஇராமாயணம் – கணவன் பிரிவினை விடக் காடு சுடுமோ என கேட்கிறாள் சீதை.

“இம்பர் நாட்டின் சொல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டின் கற்பகக்கா
ஓங்க நிழல் இருந்தாலும்

**செம்பொன் மேரு அனைய புயத்**
**திறல் சேர் இராமன் திருக்கதையில்**
**கம்ப நாடன் கவிதையிற் போல்**
**கற்றோர்க் கிதயம் களியாதே''**

கம்பராமாயணத்தில் வெளிப்படுகிற கவியாற்றாலை, கற்பனை திறனை, காட்சிப்படுத்தும் எழிலை, சந்தத்தின் ஒழுங்கை மிகச் சரியாக கையாண்டு உலகக்கவி பேரரசராய் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட கம்பன், ''நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்ற சொல்லாடலில், காதலின் உயர்வையும், பெண்மையின் பேரன்பையும், வெளிப்படுத்தும் விதமாக தன்னையும், கானகத்திற்கு அழைத்து செல்லுமாறு ராமனிடம் வேண்டுகிறாள் சீதை என்பதை மிக அழகியலோடும், என்றைக்கும் விரித்து பல்பொருள் காணக் கூடிய வகையிலும் படைத்திருக்கிறார்.

சிறிதும் விருப்பமின்றி, இரக்கமற்ற மனதோடு என்னை விட்டு விலகிச் செல்ல முடிவெடுக்க எப்படி இயன்றது என்ற கேள்வியோடு,



உன்னால் எனக்கு நேர இருக்கும் பிரிவுத் துயராகிய வெப்பத்திற்கு, பிரளய காலத்து சூரிய வெப்பமும் நிகராகாது. எனவே பெருங்காடு புகும் நீங்கள் என்னையும் உடன் அழைத்து செல்லுங்கள் என்கிறாள்.

இராமனுக்கு பட்டமில்லை, பதவியில்லை காட்டிற்கு செல்லவேண்டும் என்ற செய்தியை கேட்டு பெரும் துயருற்ற சுமித்திரை, இலக்குவனை அழைத்து, நீயும் இராமனோடு காட்டுக்கு துணையாகச் செல். இத்தருணத்தலிருந்து, ராமனும் சீதையும் தான் உனக்கு தாய், தந்தையர் என்று கட்டளையிட்டார். மேலும் மீண்டும் அயோத்தி திரும்பினால் ராமனோடு தான் திரும்ப வேண்டும். தீங்கேதும் ஏற்பட்டால், ராமனுக்கு முன்பாக உன் உயிர் போக வேண்டும் எனக் கூறி இருவரையும் வாழ்த்தி கண்ணீர் மல்க வழி அனுப்பி வைத்தாள்.

தாங்கள் உடுத்தியிருந்த அரண்மனை உடைகளை களைந்து மரவுரி அணிந்து கொண்டு, இராமனும் இலக்குவனும், சீதை யிடம் தகவல் சொல்லும் பொருட்டு, சீதையின் அரண்மனைக்கு சென்றார்கள்.

இராமனின் கோலம் கண்டு அதிர்ச்சியுற்ற சீதையிடம், நிகழ்ந்தவை அனைத்தையும் விளக்கிய இராமன்,

**யான் கான் சென்று மீளுவேன் விரைவில்:**

**நீ வருந்தாது ஈண்டு இருப்பாயாக:**

**என்றுரைத்தான்.**

இந்த சொற்களால் அதிர்ந்த சீதை, இராமன் அரசாட்சி இழந்ததையோ, மரவுரி தரித்து காடு செல்ல இருப்பது பற்றியோ கூட சிறிதும் கவலை கொள்ளவில்லை. தன்னை பிரிந்து காடு செல்வதை அறிந்தே அவள் மிக்க துயருற்றாள். அப்பெரும் துயரினை விளக்கும் பொருட்டை

**பரிவு இகந்த மனத்து ஒரு பற்று இலாது**

**ஒருவுகின்றனை ஊழி அருக்கனும்**

**எரியும் என்பது யாண்டையது ஈண்டு நின்**

**பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள்.**

சீதையின் இந்த வேண்டுதலுக்கு, முன் வைத்த கேள்விக்கு எவ்வாறு சமாதான பதிலுரை தருவது என்று யோசிக்கும் முன்பே, தானும் மரவுரி உடுத்தி கொண்டு கானக பயணத்திற்கு தயாராக நின்றாள் சீதை.

**விளைவு உண்ணுவாய் அல்லை போத**
**அமைந்தனை ஆதலின் எல்லை அற்ற இடர்**
**தருவாய் என்றான் - நகர் நீங்கு படலம் 1922**

சீதை காட்டிற்கு வரும் முடிவினை இராமன் ஏற்றுக் கொள்ளும் மனமற்றவனாய், நீ எங்களுடன் வருவதால் ஏற்பட போகும் விளைவுகள் குறித்து அறியாமல் பேசுகிறாய். எங்களோடு வருவதன் மூலம் எனக்கு எல்லையற்ற துயரத்தை தருவாய் என்று கூறிய இராமன் அதை விளக்கும் பொருட்டு, தவ வாழ்க்கைக்கு செல்லும் என்னால் பெண்ணாகிய உன்னை உடனழைத்து செல்வது ஏற்புடையதல்ல என்றும், உன்னை பாதுகாக்கும் பொறுப்பையே முழு





நேரமும் நான் செய்ய வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்து உடன் அழைத்து செல்ல மறுக்கிறான்.

ஆயினும் தீர்மானமாக, காடு செல்லும் உறுதியில் சீதையிருந்த காரணத்தால் இராமன், தம்பி இலக்குவனோடு, சீதையையும் அழைத்து கொண்டு கானக வாழ்க்கைக்குள் புகுகின்றான்.

**ஊர் பாழ்த்தன்ன ஓமையம்**
**பெருங்காடு இன்னா என்றி**
**ராயின் இனியவோ**
**பெரும தமியோர்க்கு மனையே - குறுந்தொகை 124**

இந்த பாடலும் சீதையின் நிலையில் உள்ள தலைவி, தலைவனிடம் கூறுவது போல் அமைந்துள்ளது.

தன் தலைவியை உடன் அழைத்து செல்ல விரும்பாத தலைவர், பாழடைந்த ஊர் போற்று காட்சிபடுத்தும் ஓமை மரங்கள் நிறைந்த பாலைவனத்தில் உன்னால் நடக்க முடியாது என்ற தலைவனிடம், உம்மை பிரிந்து இல்லத்தில் தனித்து கிடக்கும் துன்பத்தை விட காட்டு பாதையில் ஏற்படும் துயரங்கள் பெரியதல்ல என்கிறாள்.

சீதையும் அவ்வாறே கணவனுடன் செல்லும் பொருட்டே, மறுமொழிகள் கூறி, திடமான முடிவுடன், மரவுரி அணிந்து இராமர் லட்சுமனனுடன் வனம் புகுந்தாள்.

# வெள்ளி அறிவோம்

## ச. நந்தகுமார்

கிழமைகளில் ஒன்றான வெள்ளியைப்பற்றி தெரியப்போவதில்லை. உலோகங்களில் ஒன்றான வெள்ளி பற்றிய தகவல்களைப் பார்க்கப் போகிறோம். வெள்ளி (Silver) ஒரு வேதியியல் தனிமம். இதன் வேதியியல் குறியீடு Ag என்பதாகும். இக்குறியீடு வெள்ளியின் இலத்தீன் மொழிப் பெயராகிய ஆர்கெண்ட்டம் (Argentum) என்பதில் இருந்து உருவானது. இதன் அணுவெண் 47, மற்றும் இதன் அணுக்கருவினுள் 60 நொதுமிகள் உள்ளன.

வெள்ளி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பயன்பட்டு வருகிறது. இது பொதுவாக தங்கத்திற்க்கு அடுத்து இரண்டாவது மதிப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ரோமர்களின் பணமாக வெள்ளி பயன்படுத்தப்பட்டது. மேலும் வெள்ளி நோய் தொற்றுக்கள் மற்றும் சிதைவுகளை தடுக்க பயன்படுத்தப்படுகிறது.

### *இயற்பியல் பண்புகள்*

வெள்ளி ஒரு மென்மையான உலோகமாக உள்ளது. மேலும் இது பணமாகவோ அல்லது நகைகள் பயன்படுத்தப்படும் மதிப்புமிக்க உலோகமாக உள்ளது.

இது பெரும்பாலும் தங்கத்துடனோ அல்லது வேறு சில உலோகங்களுடனோ அவற்றை கடினமாக்கக் கலக்கப்படுகிறது. மிகவும் பளபளப்பு வாய்ந்த நீலம் கலந்த வெள்ளை நிறம் உடையது. இது ஒரு சிறந்த மின்கடத்தியாக உள்ளது.

வெள்ளியின் ஆங்கிலப் பெயரான சில்வர் ஆங்கில மொழியில் இருந்து மட்டுமே எடுக்கப்பட்ட வார்த்தைகளில் ஒன்றாகும். இது மதிப்பு மிக்கதானதால் உலகம் முழுவதும் வெள்ளி நாணயங்கள் மற்றும் பார்கள் கடைகளில் வாங்கி விற்க்கப்படும்.

இத்தனிமம் மிகஅதிகமான தகடாக்கத் தன்மை கொண்ட ஒரு உலோகம். வெள்ளியில் செய்த குவளை, உணவுத் தட்டு, கிண்ணம் போன்ற பாத்திரங்களைப் பலரும் பார்த்திருப்பதால் இது நன்கு அறியப்பட்ட, நன்கு தட்டி கொட்டி, தகடாக்க வல்ல ஒரு மாழையாகும்

### *இரசாயன பண்புகள்*

இது வினைதிறன் மிகவும் குறைவான உலோகம். இது அமிலங்கள் கரையும் திறனை அதிகமாக கொண்டதல்ல எனினும் நைட்ரிக் அமிலம் இதை கரைக்கின்றது. கரைத்து வெள்ளி நைட்ரேட்டை உருவாக்கும்.

இது பொட்டாசியம் டை குரோமேட்டுடன் அல்லது பொட்டாசியம் பர்மாங்கனேட் போன்ற வலுவான ஆக்ஸிஜனேற்றம் பொருளுடன் எந்த வினைபுரிதலும் செய்வதில்லை.

இது எளிதில் அரிக்கப்படுவதில்லை. காற்றுடன் ஹைட்ரஜன் சல்பைட் இருக்கும் போது மட்டுமே அது வினைபுரிந்து ஒரு வெள்ளி ஆக்ஸைடு என்ற கருப்பு படலத்தை உருவாக்குகிறது.



வெள்ளியின் +1 மற்றும் +2 சேர்மங்கள்: வெள்ளியின் சேர்மங்களில் +1 அதிகம் உள்ளது. ஒரு சில கலவைகள் +2 நிலையில் உள்ளது

எனினும் இவை மிகுந்த விஷத்தன்மை வாய்ந்ததாகும் மேலும் அவை மிகவும் வலுவான ஆக்ஸிஜனேற்ற காரணிகளாக உள்ளன.

வெள்ளியின் சேர்மங்கள், பழுப்பு கருப்பு, மஞ்சள், சாம்பல், அல்லது நிறமற்றதாக இருக்கலாம்.பொதுவாக வெள்ளி சேர்மங்கள் கிருமி நாசினிகளாக உள்ளன.

## வெள்ளி (|) சேர்மங்கள்

வெள்ளி (|) சேர்மங்கள் சிறந்த ஆக்ஸிஜனேற்ற காரணிகளாக உள்ளன. அவை மிகவும் விலை உயர்ந்தவை. அவை:

வெளிர் மஞ்சள் நிற வெள்ளி புரோமைடு,

மஞ்சள் நிற வெள்ளி கார்பனேட், மஞ்சள்

வெள்ளை நிற வெள்ளி குளோரைடு,

மஞ்சள் பழுப்பு நிற வெள்ளி (|) ஃப்ளோரைடு,

நிறமற்ற வெள்ளி அயோடைடு,

மஞ்சள் நிற வெள்ளி அயோடைடு,

நிறமற்ற வெள்ளி நைட்ரேட்,

பழுப்பு அல்லது கறுப்பு நிற வெள்ளி ஆக்சைடு,

கருப்பு நிற வெள்ளி சல்பைட்,

## வெள்ளி (||) சேர்மங்கள்

வெள்ளி (||) சேர்மங்களும் சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்ற முகவர்களாகும் மற்றும் அரிதானவை ஆகும். வெள்ளி (||) ஃப்ளோரைடு, வெள்ளை அல்லது சாம்பல் நிற மிகவும் வலுவான ஆக்ஸிஜனேற்ற முகவராகும்.

## நிகழ்தல் மற்றும் பிரித்தெடுத்தல்

இயற்கையாக வெள்ளி தங்கத்துடன் உலோகக் கலவையாகவும் மற்றும் ஆர்சனிக், கந்தகம், ஆண்டிமணி அல்லது குளோரின் போன்றவற்றுடன் கலந்த தாதுப்பொருளாகவும் கிடைக்கின்றது. அர்சென்டைட், குளொரார்கைரைட் மற்றும் பைரார்கைரைட் போன்றவை வெள்ளியின் தாதுக்கள் ஆகும்.

### *பயன்கள்*

வெள்ளி உலகமெங்கும் பணமாகவும் நகையாகவும் மற்றும் பல விஷயங்கள் மூலம் உலகம் முழுவதும் உள்ள பல ஆயிரக்கணக்கான மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அது சாம்பல் வண்ணத்தில் தெரிந்தாலும் கூட ஒரு வெள்ளை உலோகம் என அழைக்கப்படுகிறது. வெள்ளி பாத்திரங்களை செய்ய பயன்படுத்தப்படுகிறது.

அது ஒரு கலவையாக செயற்கை பற்கள் தயாரிக்கவும் பற்களின் இடைவெளியை நிரப்பவும் பயன்படும்.மேலும் வெள்ளி ஒரு வினை ஊக்கியாக பயன்படுகிறது.

வெள்ளி சேர்மங்கள் பல கிருமிநாசினிகளாக உள்ளன. இது பாக்டீரியா கொல்லவும் மற்றும் மற்ற சில பயனுக்காகவும் பயன்படுகிறது.

இது மின்சேமிப்பு கலங்களில் வெள்ளி ஆக்சைடாக பயன் படுத்தப்படுகிறது. அவை புகைப்படம் எடுக்கும் இழைகளில் பயன் படுத்தப்படுகின்றன. அவர்கள் ஆடையில் வாசனை குறைக்கப் பயன்படுகிறது. சில வெள்ளி கலவைகள் தீக்காயங்கள் ஆற உதவும் என்று கிரீம்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இது இயற்கையில் தனியாகவும் ஆர்செண்ட்டைட், குளோரார்கைரைட் ஆகிய கனிமங்களில் இருந்தும் கிடைக்கின்றது.

வெள்ளிதான் யாவற்றினும் அதிக மின்கடத்துமையும், வெப்பக்கடத்துமையும் கொண்ட தனிமம் (தனிம மாழை). செப்பு, தங்கம், ஈயம், துத்தநாகம் முதலான தனிமங்களைக் கனிமங்களில் இருந்து பிரித்து எடுக்கையில் வெள்ளி கூடவே கிடக்கும் ஒரு துணைவிளைப்பொருளாக உள்ளது.

### *பாதுகாப்பு*

வெள்ளியினால் மனிதர்களுக்கு ஒரு பெரிய ஆபத்து ஏதும் இல்லை. எனினும் வெள்ளி கலவைகள் நச்சு தன்மை வாய்ந்தது.

இதனால் பாதிக்கப்பட்டவரின் தோல் நீல நிறமாக மாறும்.ஆனால் கூழ்மவெள்ளி, மிகக்குறைந்த அளவில் ஒரு பொதுவான ஹோமியோபதி மருந்தாக பயன்படுகிறது.

### *பிரித்தெடுப்பு*

வெள்ளி உண்மையில் தங்கத்தை விட அதிக பயன் கொண்டதாகும் மேலும் 1990 முதல் ஒவ்வொரு ஆண்டும் தோண்டி எடுக்கப்பட்ட அளவை விட அதிகமாக பயன் படுத்தப்பட்டு வருகிறது.

எனவே உலகில் சேமித்து வைக்கப்பட்டுள்ள வெள்ளி வேகமாக ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது. வெள்ளி விற்கும் நிறுவனங்களிடம் இருந்து அதைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் அதன் விலைகளைச் செயற்கையாக குறைத்து பெறுகிறது. இதுவே மறைவற்ற குறைவான விற்பனை என அழைக்கப்படுகிறது.

உலகின் சேமிக்கப்படும் அனைத்து வெள்ளியும் காலியான பின் முதலீட்டாளர்கள் மீண்டும் தங்கள் பங்கு வெள்ளியை கேட்க தொடங்கும் போது வெள்ளி விலை மிக அதிகமாக உயரும்.

வெள்ளியின் விலை ஜூன் 2010இல் அவுன்ஸ் ஒன்றிற்கு 18 அமெரிக்க டாலர்கள் வரை ஆகும். வெள்ளியின் விலை டிசம்பர் 2010இல் அவுன்ஸ் ஒன்றிற்கு 28 அமெரிக்க டாலர்கள் வரை அதிகரித்துள்ளது.

## *கவனிக்க வேண்டியவை*

வெள்ளி ஒரிஜினலா என எப்படிக் கண்டறிவது? நைட்ரிக் அமிலம், தூய வெள்ளியின் மீது படும்போது நுரைத்தால் அது நல்ல வெள்ளி.

வெள்ளி நகையை வெண்மையான சுவரில் தேய்க்கும் போது கருப்புக் கோடு விழுந்தாலும், அது 100% வெள்ளிதான். அதற்காக, அடிக்கடி தேய்த்தால் வெள்ளி வீணாகிவிடும்!

பெரும்பாலும் வெள்ளிக் கொலுசுகள் 60 டச் தரத்தில்தான் கிடைக்கும். ஆனால், விலையோ 80 ‘டச்’ அளவுக்கானதாக இருக்கும். காரணம், 20 சதவிகிதம் இதில் சேதாரமாகவே போய் விடும். இனிமேல் வாங்கும்போது இதையெல்லாம் விசாரித்து தெளிவு பெற்று வாங்குங்கள்.

வெள்ளியை மாற்றி, வேறு வெள்ளி நகை வாங்க முடிவெடுத்தால், முன்பு எந்தக் கடையில் அதை வாங்கினீர்களோ அங்கேயே விற்றால் சரியான விலை கிடைக்கும்.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வகையான அடையாள வார்த்தைகள் வெள்ளி நகைகளில் பொறிக்கப்படுகின்றன. அதனால், நகைகளை வாங்கிய ஊரிலேயே விற்றால்தான் அதற்கான விலை கிடைக்கும்.

வெள்ளி நகை வியாபாரங்களில் ஊருக்கு ஊர் பல சூட்சமங்கள் உள்ளன. தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் பெரும்பாலான நகைக் கடைகளில் வெள்ளி கொலுசை வாங்கும்போது திருகாணியுடன் சேர்த்து எடை போடுவார்கள்.

ஆனால், அதே கடையில் திரும்ப விற்கும்போது திருகாணியைக் கழற்றி விட்டு எடை போடுவார்கள். ஏனென்றால், அங்கு திருகாணிகள் பெரும்பாலும் வெள்ளியில் செய்யப்படுவதில்லை என்பதே காரணம். இனி, இதையும் கவனித்தே கொலுசு வாங்குங்கள்.

'வெள்ளி நகையை என் தங்கை அணிந்தால் கறுத்துப் போகாமல் அப்படியே இருக்கிறது. அதுவே நான் அணிந்தால் கறுத்து விடுகிறது' - இப்படி பல சந்தர்ப்பங்களில் கேள்விப்பட்டிருக்க முடியும்.

இது அந்த நகையை அணிந்திருப்பவரின் உடல் வெப்பத்தைப் பொறுத்தது. உடல் வெப்பம் அதிகமாக இருந்தால், வெள்ளி கறுக்கும். குளிக்கும்போது வெள்ளி நகைகளையும் குளிப்பாட்டினால் கறுப்பழகி, வெள்ளையழகியாகலாம்.

வெள்ளி நகைகள் கறுத்துப் போனால் பல் துலக்கும் பேஸ்ட்டினால் கழுவலாம்; கடுமையான அழுக்கு ஏறி இருந்தால், பூந்திக்கொட்டை ஊற வைத்த நீரில் கழுவலாம்.

தயிர், எலுமிச்சம் பழம் போன்றவையும்கூட, அழுக்கை சுத்தமாக நீக்கும். ஆனால், இவற்றை அடிக்கடி உபயோகித்தால், அவற்றில் உள்ள அமிலம் வேதி வினைபுரிந்து, வெள்ளியைக் கரைக்கக்கூடும்.

வெள்ளி, நொடியில் பளபளக்க வேண்டுமா? வீட்டில் இருக்கும் மென்மையான திருநீறைப் போட்டு மெள்ளத் தேய்த்தால் விரும்பிய ரிசல்ட் கிடைக்கும்.

பிறந்த வீட்டு சீதனமாகவோ, வீட்டு விசேஷங்களுக்கு கிஃப்ட் டாகவோ வந்த வெள்ளிப் பாத்திரங்களை காலத்துக்கும் பத்திரமாக பொத்திப் பொத்திப் பாதுகாக்க வேண்டும் அல்லவா?

கூடவே, குழந்தைக்கு ஆசையாக சோறு ஊட்ட கிண்ணம், ஸ்பூன், டம்ளர், பூஜை சாமான்கள் என வெள்ளியில் வாங்கும்போது, தரம் குறையாமல் பார்த்து வாங்க வேண்டும் அல்லவா?

வெள்ளி நகைகளைப் போலவே பாத்திரங்களையும் நம்பிக்கையான கடையில் வாங்க வேண்டும். வாங்கும்போது, அதில் சீல் இருக்கிறதா என கண்டிப்பாகப் பார்த்து வாங்குவது விலை கொடுத்து வாங்கும் காசுக்கு நல்லது.

வெள்ளிப் பாத்திரங்கள் பொலிவிழக்காமல் இருக்க வேண்டுமானால், கண்டிப்பாக ஸ்டீல் பீரோவிலோ ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் மற்றும் பித்தளை பாத்திரங்களுடன் கலந்தோ வைக்காமல் இருப்பது நல்லது.

நியூஸ் பேப்பர் அல்லாத மற்ற பேப்பர்கள், பிரவுன் கவர் பேப்பர்களில் சுற்றி வைக்கலாம்.

பாட்டி காலத்து மரப்பெட்டி இருந்தால், அதைத் தூக்கி எறிந்துவிட வேண்டாம். அதற்குள் வெள்ளிப் பாத்திரங்களை பத்திரப்படுத்தி வைக்கலாம்.

## *வெள்ளி நகைகள்*

நகைகளை விரும்பாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். நகைகளில் தங்க நகை பெண்களுக்கு மிகவும் பிடிக்கும் என்றாலும் வெள்ளிப் பொருட்களையும் அணிய மறுப்பதில்லை.

நகைகள் அணிவது நமது பாரம்பரியத்தில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. உடலின் சில முக்கிய பகுதிகளுக்கு என்றே தனித்தனியாக நகைகள் உள்ளது.

இவை அழகுக்கு மட்டும் இல்லாமல், ஆரோக்கியத்துக்காகவும் அணியப்படுகிறது. அப்படி வெள்ளி நகைகள் அணிவதன் மூலம் உண்டாகும் ஆச்சரியமான நன்மைகள் என்ன என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

நகைகள் அணிவதன் மூலம் நம் உடலில் முக்கிய வர்ம புள்ளிகளை தூண்டி, நம் உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்புகளையும் பராமரிக்கிறது என்று கூட சொல்லலாம்.

வெப்பத்தைக் குறைத்து உடலை குளிர்ச்சியாக வைக்க தங்கம் மட்டுமே ஏற்றது. தங்கம் எப்பொழுதுமே நம் உடலை தொட்டுக் கொண்டு இருப்பதினாலே, நாளடைவில் உடலின் அழகு அதிகரிக்கும் என்றும், ஆபரணங்கள் அணிவதினால் நோய்கள் மறைமுகமாகக் கட்டுப் படுத்தப்படுகிறது.

தங்கம் மட்டும் இல்லாமல் வெள்ளி, முத்து, பவளம் என இந்த மாதிரியான நகைகளை அணிவதினாலேயும் நன்மைகள் ஏற்படுகிறது. எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம் கொலுசை மட்டும் தங்கத்தில் அணிவதில்லை.

அதற்கு என்ன காரணம் என்றால், தங்கத்தில் மஹாலட்சுமி குடியிருக்கிறார் என்ற நம்பிக்கை இருப்பதனால் கொலுசை காலில் அணிவதில்லை. காலில் அணியும் எல்லா நகைகளும் வெள்ளியில் தான் அணிய வேண்டும்.

வெள்ளி நகைகள் நம்முடைய ஆயுளை விருத்தி செய்யக்கூடியது. நம் உடலின் சூட்டை அகற்றி குளிர்ச்சியைத் தருகிறது. குழந்தைகளுக்கு அதிக முத்துகள் கொண்ட கொலுசுகள் அணிந்து விடுவதனால், குழந்தைகள் இருக்கும் இடத்தை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது.

வெள்ளி கொலுசு குதிகால் நரம்பை தொட்டுக்கொண்டு இருப்பதனால், குதிகாலின் பின் நரம்பு வழியாக மூளைக்கு செல்கின்ற உணர்ச்சிகளை குலைத்துக் கட்டுப்படுத்துகிறது. இந்த மாதிரி வெள்ளி அணிவதால் பல நன்மைகள் இருப்பதனால் தான் இன்னமும் வெள்ளிக்கு உண்டான மவுசு குறையாமல் இருக்கிறது.

✪

# வறுமையில் வாடிய கலைஞன்

# வின்சென்ட் வான் கோ

## நந்தகுமார்

வின்செண்ட் வான்கா (Vincent Van Gogh) ஒரு டச்சு பின்-உணர்வுப்பதிவுவாத ஓவியர். இவரது ஓவியங்கள் சில உலகின் மிகவும் அறியப்பட்டவையும் புகழ் பெற்றவையும் அதிகம் விலையுள்ளவையுமான ஓவியங்களுள் அடங்கும்.

இவர் முதலில் கலைப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்தில் பணி புரிந்தார். பின்னர் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிய பின், மிக ஏழ்மையான மக்களைக் கொண்ட சுரங்கப் பகுதியொன்றில் சமயத் தொண்டு செய்தார்.

அங்குள்ள மக்களை இவர் வரையத் துவங்கினார். இங்கே தான் தனது முதல் முக்கியமான ஓவியமான உருளைக்கிழங்கு உண்போர் எனும் ஓவியத்தை வரைந்தார். மற்ற ஓவியர்களைப் போல் அன்றி தனது முப்பதாம் வயதுக்குப் பின்னரே இவர் ஓவியம் வரையத் துவங்கினார்.

இவரது பெரும்பாலான ஓவியங்கள் இவரது வாழ்நாளின் கடைசி இரு ஆண்டுகளில் வரையப்பட்டவையே. இவர் உயிருடன் இருந்த காலத்தில் இவரின் கலையை யாரும் மதிக்கவில்லை.

தான் வாழ்ந்த காலத்தில் இவரால் தனது ஓவியங்களுள் ஒன்றை மட்டுமே விற்க முடிந்தது. இன்றோ நவீன ஓவியத்தின் செல்வாக்கு வாய்ந்தவராக இவர் கருதப்படுகிறார்.

### *இளமை*

ஹாலந்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் வான்கோ. வின்செண்ட் வில்லியம் வான்கோ நெதர்லாந்தில் உள்ள குரூட் சுண்டெர்ட் எனுமிடத்தில் 1853ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார்.

வான்கோ பிறப்பதற்கு முன்பே சரியாக ஓராண்டுக்கு முன்னர் அதே தேதியில் பிறந்த அவரது அண்ணன் சில வாரங்களில் இறந்து போனார். அவரது அண்ணன் நினைவாக அவரது பெயரை குழந்தைக்கு சூட்டினர்.

பின்னாளில் இது தெரிந்தபோது வான்கோவுக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை ஏற்படத் தொடங்கியது. அண்ணன் பெயரை தாங்கியிருக்கிறோம் என்ற எண்ணம் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

வான்கோவின் தந்தை தியோடரஸ் வான்கோ ஒரு மதபோதகராக இருந்தார். ஓவியமும் மதமும் இவரது குடும்பத்தில் இரு முக்கியப்பணியாக இருந்தது. இவரது மற்றொரு சகோதரர் கோர். வான்கோவுக்கு சகோதரர்களைத் தவிர எலிசபெத், அன்னா, வில்லிமினா என்ற மூன்று சகோதரிகளும் இருந்தனர்.

அதனால் குடும்பத்திற்குப் போதிய வருமானம் இல்லை. தாழ்வு மனப்பான்மையும், குடும்ப வறுமையும் வான் கோவை முன்கோபியாகவும், முரடனாகவும் மாற்றியது. தேவலாயத்தில் உபதேசம் செய்யும் தந்தையால் கூட வான்கோவை அடக்க முடியாமல் போனது.

### கல்வி

குழந்தைப் பருவம் முதலே மிக இறுக்கமான மனநிலையில் இருந்த வான்கோ 1860இல் சுண்டெர்ட் கிராமத்தில் இருந்த பள்ளியில்



சேர்க்கப்பட்டார். அங்கு 200 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் மட்டுமே பாடம் போதித்தார்.

1861 முதல் 1864 வரை வான்கோவும் அவரது சகோதரி அன்னாவும் வீட்டிலேயே பாடம் பயின்றனர். பின்னர் 20 கி.மீ. தொலைவில் உள்ள செவென் பெர்கெனில் சான் புரொவிலி உண்டு உறைவிடப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

தனது குடும்பத்தை விட்டுப் பிரிந்தது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. 1866 செப்டம்பர் 15இல் தில்பர்கில் உள்ள இரண்டாம் வில்லியம் கல்லூரியில் சேர்ந்தார்.

ஆனால் அவருக்குப் படிப்பின் மீது நாட்டம் இல்லை. இருந்தாலும் அவரை அரித்து வந்த தாழ்வு மனப்பான்மை மனச்சோர்வாக மாறத் தொடங்கியது.

எனவே வெளியூரில் ஓவியக்கூடம் நடத்தி வந்த உறவினர் வீட்டிற்கு அவரை அனுப்பி வைத்தனர். அங்கு சென்ற போதுதான் அவருக்கு ஓவியங்கள் மீது ஆர்வம் ஏற்பட்டது.

அங்கு பாரிசின் புகழ்பெற்ற ஓவியரான கான்டாண்டைன் சி.ஹுயிமன் என்பவர் ஆசிரியராக இருந்தார். சிறுவயது முதலே ஓவியத்தில் ஈடுபாடுமிக்கவராகத் திகழ்ந்த வான்கோவுக்கு அவர் முறைப்படியான



ஓவியக்கலையை போதித்தார். பெற்றோரின் அன்பும், உடன் பிறந்தவர்களின் அன்பும் இல்லாமல் வாழ்க்கையில் எந்தவித பிடிப்பும் இல்லாத வான்கோவுக்கு அவரது மாமா செண்ட் என்பவர் உதவியாக இருந்தார்.

அவர் வான்கோவுக்காக 'தி ஹேக்' என்ற இடத்தில் ஓர் ஓவியக் கூடத்தில் பணியில் சேர உதவினான். சில நாள் பயிற்சிக்குப் பிறகு அவ்வோவியக் கூடம் லண்டனுக்கு மாற்றப்பட்ட காரணத்தால் வான்கோவும் லண்டன் செல்ல வேண்டியதாயிற்று.

இப்பணியில் அவர் வெற்றிகரமாக ஈடுபடவும் பணம் சம்பாதிக்கவும் செய்தார். இதுவே அவர் மகிழ்வாக இருந்த காலமாகும். அன்புக்காக ஏங்கியதாலோ என்னவோ தாம் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரின் பெண் யூகினி லோயர் என்பவரை நேசிக்கத் தொடங்கினார்.

ஆனால் அவரது காதலை அந்த பெண் ஏற்றுக்கொள்ள மறுக்கவே அவரது சோகமும், மனச்சோர்வும் அதிகமானது. இது அவரது நடவடிக்கையில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது.

## *மதபோதகர்*

சொந்த ஊர் திரும்பினார் வான்கோ. அங்குள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கு காணும் காட்சிகளை ஓவியமாக வரைந்தார்.

தந்தைபோல மதபோதகராக மாறும் எண்ணத்துடன் நிலக்கரி சுரங்க ஊழியர்களிடம் மதபோதனையில் ஈடுபட்டார். அங்கு இவர் வரைந்த 'தி பொட்டேட்டோ ஈட்டர்ஸ்' என்ற ஓவியம் உலகப்புகழ் பெற்றது.

பள்ளியின் உரிமையாளர் மிடிலெசெக்சுக்குக் குடிபெயர்ந்ததால் வான்கோவும் உடன் சென்றார். வாழ்க்கையில் என்ன செய்வது என்று தெரியாமல் பலமுறை குழம்பினார் வான்கோ. தந்தையைப்போல எளிமையாக மதபோதகர் ஆகலாமா என்றுகூட அவர் யோசித்தார்.

சுமார் ஓராண்டு வாஸ்மெஸ் என்ற நிலக்கரி சுரங்க ஊழியர்களின் கிராமத்தில் அவர் மதபோதனையில் ஈடுபட்டார். கிறித்துமசு விடுமுறையில் வீட்டிற்குச் செல்லும்போதும் விவிலியத்தை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்தார்.

மதபோதகராக இருந்தபோது வான்கோ தன்னைத்தானே வருத்திக்கொண்டு இறைச்சியை உண்ணாது மரக்கறி உணவுகளையே உண்டு கடும் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

இவரது போதனை முறைகள் தேவாலய நிர்வாகத்துக்கு பிடிக்காததால், இவரது பதவி பறிக்கப்பட்டது. இதனால் மனம் உடைந்த வான்கோ பிரஸல்ஸ் நகருக்கு சென்றார். அங்கு மனம்போன போக்கில் வாழ்ந்தார்.

### *ஓவியங்கள்*

வான்கோ விலைமாதர்களில் ஒருவரை திருமணமும் செய்து கொண்டார். ஆனால் இல்லற வாழ்க்கை அவருக்குக் கொடுமையானதாக அமைந்தது.

பல ஆண்டுகள் பொறுத்த அவர் கடைசியில் மணமுறிவு செய்துகொண்டார். மனத்தை ஒருநிலைப்படுத்தி ஓவியத்தில் கவனம் செலுத்தலாம் என்று முடிவெடுத்தபோது அவருக்கு வயது 33.

அப்போதும் அவர் வறுமையிலேயே காலம் தள்ள வேண்டியிருந்தது. வண்ணமும் தூரிகையும் வாங்குவதற்கு கூட அவரிடம் பணம் இல்லை. தன் சகோதரன் தியோ அவ்வப்போது கொடுத்த பணத்தைக் கொண்டு காலத்தை ஓட்டிய வான்கோ ஓவியங்கள் வரையத்தொடங்கினார்.

தன் கவனம் முழுவதையும் ஓவியங்கள் மீது பதித்தார். ஆதிகால குகை ஓவியங்கள், கேட்விக் ஓவியங்கள். மறுமலர்ச்சி ஓவியங்கள், உணர்ச்சிமிகு ஓவியங்கள், இயற்கை ஓவியங்கள் என தனது ஓவியத்தில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தினார் வான்கோ.

'உணர்வு வெளிப்பாடு' என்ற புதிய பாணியை வான்கோ தன் ஓவியங்களில் அறிமுகம் செய்தார். அவருடைய ஓவியங்கள் பளிச்சென்று வண்ணமயமாக இருக்கும். அவர் வரைந்த ஓவியங்களில் உலகப்புகழ் பெற்றது பன்னிரண்டு சூரியகாந்தி பூக்கள் நிறைந்த பூச்சாடி ஓவியம் ஆகும்.

30 வயதிற்கு மேல் ஓவியம் வரைய ஆரம்பித்தாலும் வான்கோவின் கடைசி ஆறு ஆண்டுகளில் சுமார் 700 தூரிகை ஓவியங்களையும், 800 எண்ணெய் ஓவியங்களையும் வரைந்தார்.

ஆனால் அவற்றில் ஒரே ஒரு ஓவியத்தை மட்டுமே வான்கோவால் விற்க முடிந்தது. அதுவும் வீட்டு வாடகை கடனுக்காக அந்த ஓவியத்தை வீட்டு உரிமையாளர் எடுத்துக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

ஒருமுறை மனச்சோர்வு முற்றியபோது அவர் என்ன செய்தார் தெரியுமா? கத்தியை எடுத்து தனது ஒரு காதை அறுத்துக்கொண்டார். விசித்திரமாக இருந்தாலும் உண்மை.

மனச்சோர்வால் எவ்வுளவு ஆழமாக பாதிக்கப்பட்டிருந்தால் அவர் அந்த காரியத்தை செய்திருப்பார். பின்னாளில் காதில் கட்டுப்போட்ட மாதிரி தமது உருவத்தையே வரைந்தார் வான்கோ.


### *மறைவு*

அவரது மனச்சோர்வு அதிகரிக்க அதிகரிக்க அவர் மனநிலை மருத்துவமனைக்கு போவதும் வருவதுமாக இருந்தார். வாழ்க்கை முழுவதும்

ஒரு வித மனநோயாளியாக சோகத்திலேயே வாழ்ந்த அவர் தனது 37ஆம் வயதில் 1890ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் நாள் துப்பாக்கியால் தன்னைத்தானே நெஞ்சில் சுட்டுக்கொண்டார். ஆனால் அவர் சுட்டுக் கொண்டதாகக் கூறப்படும் துப்பாக்கி இதுவரை கண்டறியப்படவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து 1890ஆம் ஆண்டு சூலை 29ஆம் நாள் அவர் உயிர் பிரிந்தது. அவரது சகோதரர் தியோவிடம் பேசிய அவரது கடைசி வார்த்தை 'துயரம் என்றும் தொடரும்' என்பதாகும்.

வாழ்ந்தபோது அவரது ஓவியங்களை மதிக்காத உலகம், மறைவுக்குப் பிறகு அவற்றை பொக்கிஷமாக கொண்டாடிப் போற்றியது. உலகில் மிக அதிக மதிப்புள்ளதாக இவரது ஓவியங்கள் கருதப்படுகின்றன.



## *வான்கோவின் கடிதங்கள்*

வான்கோ தனது பத்தொன்பதாம் வயதிலிருந்து சகோதரன் தியோவுக்கு கடிதம் எழுத ஆரம்பித்தார். முப்பத்தி ஏழாம் வயதில் இறக்கும் வரை, ஏறத்தாழ இருபது வருடங்கள் இந்தத் தொடர்பு தடைபடாமல் நீண்டிருந்தது.

அநேகமாக வாழ்க்கையின் எல்லாத் தருணங்களையும், உணர்ச்சிகளையும், தனது மனத்தின் பாதிக்குச் சொல்வது போன்ற உண்மையுணர்வுடன் எழுதப்பட்டவை அவை. சிறுவயதில் இணைந்து தொடர்ந்து சகோதரன், வான்கோ என்ற கலைஞனின் நிரந்தர அங்கீகரிப்பாளன், நண்பன், புரவலன் என்ற நிலைகளை மீறித் தனது மனசாட்சியின் பாதுகாவலனாகத் தியோவை ஒப்புக்கொண்டிருக்கிறார் வான்கோ.

அன்றாட வாழ்க்கையின் செயல்கள், கலை பற்றிய கனவுகள், திட்டங்கள், பிறரின் கலை பற்றிய கருத்துக்கள், பருவ காலங்கள், இயற்கைக் காட்சிகள், காதல், ஆசைகள், வேதனைகள், சந்தோஷங்கள், தோல்விகள், மனிதர்கள் என்று எல்லாவற்றைப் பற்றியும் எழுதப்பட்ட இக்கடிதங்களின் பரப்பும் உயிர்த்துடிப்பும் எழுத்தமைதியும் இலக்கியக் குணம் கொண்டவை.

ஓர் அர்த்தத்தில் இவை வான்கோவின் நாட்குறிப்புகள். விரிந்த பார்வையில் வின்சென்ட் வான்கோ தன்னையறியாமல் எழுதி வைத்த சுயசரிதை. அந்தக் கடிதங்களிலிருந்து சில பகுதிகள் தொகுப்பாக தருகிறோம்.

* ஹேகின் சாலைகளில் இரண்டு சகோதரர்கள் நடந்து போகிறார்கள். ஒருவன் சொல்கிறான் : எனக்கு முதலில் வேண்டியது பொருளாதார பலம். வியாபாரம் தொடங்க வேண்டும். என்னால் ஓவியனாக முடியுமென்று தோன்றவில்லை.

மற்றவன் : நான் நாயைப் போல ஆகிக் கொண்டிருக்கிறேன். எதிர்காலத்தில் அசுத்தமானவனாகவும் முரட்டுப் பிடிவாதமுள்ள வனாகவும் ஆகிவிடுவேன். வறுமைதான் எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் என்று இப்போதே தெரிகிறது. இருந்தாலும் நான் ஓவியனாகத்தான் இருப்பேன்.

* ‘இந்த உலகத்துக்கு நான் ஒருவகையில் கடன் பட்டிருக்கிறேன், கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் உணர்ந்தால்தான் அது என்னை பொருட்டாக மதிக்கும். ஏனெனில் முப்பது வருடங்கள் இந்த பூமி மீது நடமாடியிருக்கிறேன். அதற்கு நன்றியாக சில ஓவியங்களையும் படங்களையும் நினைவுப் பரிசாக விட்டுச் செல்ல விரும்புகிறேன். கலையின் எந்த இயல்பையாவது திருப்திப்படுத்துவதற்காக அல்ல. உண்மையான மனித உணர்வை வெளிப்படுத்துவதற்காக.’

* காகின் வந்திருக்கிறான். அவனுடைய ஆரோக்கியம் தேறி யிருக்கிறது. நீ அவனுக்காக செய்த விற்பனை ஏற்பாடுகள் பற்றி அவனுக்கு மிகவும் திருப்தி. அவசியமான பொருட்கள் வாங்குவதற்கான பணம் அதன் மூலம் கிடைக்கும். அந்தச் சுமை உன் தோளை விட்டு இறங்கியதே.

மனிதன் என்ற முறையில் காகின் எவ்வளவோ நல்லவன். நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால் அநேக காரியங்களைச் செய்ய முடியும். காகின் இங்கிருந்து ஏராளமான ஓவியம் தீட்டுவான். நானும்தான்.

நான் நோயாளியாகப் போகிறேனோ என்று சிறிதுகாலம் முன்புவரை தோன்றியது. காகின் வருகைக்குப் பிறகு அது மாறியிருக்கிறது. பண நெருக்கடி, அதனால் உனக்கு ஏற்படக்கூடிய சிரமம் இவற்றை யோசித்துத்தான் என் நோய் அதிகரித்தது. இனி அதுபோன்ற துன்பங்கள் மாறிவிடும்.

* ஆறு மாதங்களுக்குள் சொந்தமாக ஒரு ஸ்டூடியோவை உருவாக்க முடியும். அது நிரந்தரமானதாக இருக்கும். இங்கே வருகிற ஓவியர்கள் அதைத் தங்குமிடமாகக் கொள்ளலாம். என்னுடைய ஓவியமும் காகினுடைய ஓவியமும் ஒவ்வொரு மாதமும் உனக்குக் கிடைக்கும்.

உன் நிறுவனத்துக்கு வெளியே எங்கள் ஓவியங்களை விற்க வேண்டாம். என்னைப் பொறுத்தவரை இனிமேல் கூப்பிள்ஸின் படியை மிதிக்கப் போவதில்லை.

நாங்கள் தொடர்ந்து வேலை செய்கிறோம். மாலையானதும் களைத்து சோர்ந்து போகிறோம். அப்போது உணவு விடுதிக்குப் போவோம். இரவில் சீக்கிரம் உறங்குகிறோம். இதுதான் வாழ்க்கை.

காகினும் நானும் ஓவியக்கலை பற்றி காரசாரமாக விவாதிக்கிறோம். எங்களுடைய வாக்குவாதம் மின்சார ஓட்டம் போல. அது முடிவடையும்போது நாங்கள் ஓய்ந்துபோன பாட்டரிபோல ஆகி விடுகிறோம்.

* ஒரு சகோதரனுக்கு மட்டுமே ஏற்படக்கூடிய கவலையைத்தான் உன் கடிதத்தில் பார்த்தேன். அதனால் என்னுடைய மௌனத்தை முடித்துக் கொள்வது என் கடமை.

முழுமையான சுய உணர்வுடன்தான் இதை எழுதுகிறேன். பைத்தியக் காரனின் கடிதமல்ல. நீ அறிந்த உன் சகோதரனின் கடிதம். என்னை வெளியில் விடக்கூடாது என்று அநேக ஆட்கள் மேயரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னைப் பூட்டி வைக்கக் கட்டளை இட்டிருக்கிறார். அதனால் நான் இங்கே பாதுகாப்பாக இருக்கிறேன். காவல்காரர்கள் இருக்கிறார்கள். நான் என்ன குற்றம் செய்தேன் என்றுகூட நிரூபிக்காமல் இதைச் செய்திருக்கிறார்கள்.

எனக்கு மனசாட்சியின் நீதிமன்றத்தில் சொல்வதற்கு நிறைய பதில்கள் இருக்கின்றன. நான் ரோஷப்படுவதில் அர்த்தமில்லை.

* எனக்கு நானே தீர்ப்பு வழங்கிக்கொள்வேனாயின் என்னைக் குற்றவாளியாக்குவேன். எனக்கு இது போதும். இதெல்லாம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு மனிதனுக்கு எதிராக அதுவும் நோயாளியான மனிதனுக்கு எதிராக இத்தனை பேர் திரள்வது பூமியின் மையத்தில் இடி விழுவதுபோல. தவிர, மனிதர்களுடன் அதிகமாக நட்புப் பாராட்டுவது முட்டாள் தனத்தில்தான் முடிகிறது.

* தற்காலிகமாக என்னை நீ மறக்க வேண்டும். எனக்குத் தேவை சிறிது மன அமைதி. மேயரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் என்னிடம் தோழமையுடன்தான் பழகுகிறார்கள். எல்லாவற்றையும் சரிப்படுத்த கூடுமானதைச் செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

* நான் என்னைக் காயப்படுத்திக் கொண்டேன். ஆனால் பிறரிடம் அராஜகமாக நடந்து கொள்ளவில்லை. அதுவுமில்லாமல், இந்தச் செலவுகளை என்னால் தாங்க முடியாது. இதையெல்லாம் அவர்களிடம் சொன்னேன்.

நான் ஏதாவது வேலைசெய்து மூன்று மாதங்களாகின்றன. என்னைப் பூட்டி வைக்காமலும், துன்புறுத்தாமலும் இருந்தால் என்னால் வேலை செய்ய முடிந்திருக்கும். இப்போது என்னை வெளியே நடமாட அனுமதிக்கிறார்கள்.

ஒரு புத்தகம் வாங்கினேன். இரண்டு அத்தியாயங்கள் ஆவலுடன் படித்தேன். ஏதாவது படித்து வாரக்கணக்காகிறது. படிப்பு என்னுடைய நோயைக் குணப்படுத்த உதவும். பால்சாக்கின் இன்னொரு நாவலையும் படித்துக் கொண்டிருக்கிறேன். டிக்கன்ஸின் கிறிஸ்துமஸ் புத்தகங்களையும் படிக்கிறேன். அன்புள்ள தியோ! என்னைப் பூட்டி வைக்க வேண்டிய தேவை இல்லாதபடிக்கு நோய் தீருமென்றே தோன்றுகிறது.

* ‘என்னுடைய மனத்தின் சமநிலைக்கு இப்போது கோளாறு எதுவுமில்லை. என்னால் முடிந்தவரை வேலை செய்கிறேன். என்னுடைய நோய் திரும்ப வந்து விடுமானால் நீ பொறுத்துக் கொள். என்னுடைய இப்போதைய நிலையைப் பற்றி யோசித்தால் பயமாக இருக்கிறது. சிந்தனைக் குழப்பம். நாம் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுமா? ஏற்படவேண்டும் என்று விரும்புகிறேன்.’

* ‘இங்கே நான் மிகுந்த துக்கத்தோடு இருக்கிறேன். எனது விவகாரம் - உங்களை உலுக்குகிற புயல். அதைப் பற்றியும் துக்கப்படுகிறேன். நான் என்ன செய்ய? முடிந்தவரைக்கும் அமைதியுள்ளவனாக முயற்சி

செய்கிறேன். என் வாழ்க்கையின் அடிப்படையே அபாயகரமானது. என்னுடைய ஒவ்வொரு காலடியும் தடுமாறுகிறது. எனக்கு பயமாக இருக்கிறது.

இப்போதும் ஓவியங்களையும் வாழ்க்கையும் நேசிக்கிறேன். ஆனால் எனக்கென்று ஒரு பெண் துணை இனி ஏற்படப்போவதில்லை. அதற்கான வயதும் கடந்து போயிருக்கிறது. இப்போது அப்படியான ஆசை இல்லை. ஆனால், அப்படியொன்று சாத்தியமாகாமற் போனதன் துக்கம் இருக்கிறது.



*　‘எனது ஓவியங்கள் விற்பனையாகவில்லை என்பதற்காக நான் எதுவும் செய்ய முடியாது. ஒரு காலம் வரும். வர்ணத்தின் விலையை விடவும் அவற்றுக்கு மதிப்பு அதிகம் என்று மக்கள் உணர்ந்து கொள்ளும் காலம்’ - என்று எழுதினார் வான்கோ.

அந்தக் காலம் அவரது மரணத்துக்குப் பிறகு வந்தது. நூறு வருடங்களைக் கடந்தும் நீடிக்கிறது. ஏனெனில், வின்சென்ட் வான்கோவின் கலை மனித வரலாற்றுக்கு அன்புப் பரிசாக வாய்த்த கௌரவம்.

### *மறைவிற்குப் பின் மரியாதை*

வான்காவின் ஓவியங்கள் அவரின் மறைவுக்கு பின் அதிகம் பேசப்படுவதற்கும், அதிக விலை போவதற்கும் காரணம் ஓவிய நுணுக்கங்களை விடவும் அதில் உள்ள உண்மை தன்மையும் உணர்ச்சி வெளிப்பாடும் என்று சொல்வது மிகை இல்லை.

அதில் ஒன்று காது அறுபட்ட நிலையில் தன்னை தானே வரைந்து கொண்டது. இன்னொரு ஓவியம் தாடி இல்லாமல் இருக்கும் போது வரையப்பட்டது. இந்த ஓவியம் மட்டும் 1998 நவம்பரில் $71.5 மில்லியன் (டாலர்) விலை போனது; அதுவே டிசம்பர் 2011 ல் $98.4 மில்லியன் டாலர் என்பது வியப்பான விசயம்.

வாழ்ந்தபோது அவரது படைப்புகளை மதிக்காத உலகம் அவர் இறந்த பிறகு அவற்றை விலை மதிக்க முடியாதவை என்று கூறுகிறது. 1990ஆம் ஆண்டு நியூயார்க்கில் நடைபெற்ற critics ஓவிய ஏலத்தில் வான் கோவின் 'Portrait of Dr. Gache' என்ற ஓவியம் $100 மில்லியன் அமெரிக்க டாலருக்கு விற்கப்பட்டது.

உலகின் செல்வந்தர்களும், புராதன ஓவியங்களை சேகரிப்பவர்களும் வான் கோ பூர்த்தி செய்யாமல் விட்டுப்போன ஓவியங்களுக்குகூட பல மில்லியன் டாலர் கொடுத்து வாங்குகின்றனர்.

மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்களால்கூட உலகை வெல்லும் படைப்புகளை தர முடியும் என்பதுதான் வான்கோவின் வாழ்க்கை நமக்கு சொல்லும் உண்மை.

நாம் நமது குறைகளை நினைத்து குன்றிப்போகாமல் நிறைகளை நினைத்து நிமிர்ந்து நின்றால் நம்மாலும் குன்றின் மேல் இட்ட விளக்காக மின்ன முடியும்.

Owned, Published and Printed by P. Sangamithirai Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai-600 011, Printed At J.M.Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014.
Editor : M.Pattazhagan